

# அணுவும் ஆன்மாவும் !

ப்ரக்ருன்

# அணுவும் ஆன்மாவும்

நூல் ஆக்கம்

ப்ரக்ருன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அணுவும் ஆன்மாவும் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | தன்னாட்டம் |
| முதற்பதிப்பு | : | 2019 |
| வெளியீடு | : | பராபரம் |
| பக்கங்கள் | : | 71 |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அணுவும், இயக்கமும் | 15 |
| 2. | உள்ளுணர்வும், பேருணர்வும் | 25 |
| 3. | சுயம்பிரகாச அறிவு | 34 |
| 4. | தனித்துவத்தின் தன்மை | 44 |
| 5. | உண்மை இயல்பு | 51 |
| 6. | மனிதனின் சுயநலம் | 59 |
| 7. | உண்மையான வீரம் | 63 |

# அணுவும் ஆன்மாவும்

## முன்னுரை

நம்மிடையே பெரும்பாலானவர்கள் "**நான்**" என்பது என்ன? இறைவன் என்பவன் யார்? வாழ்க்கை என்றால் என்ன?, இந்த உலகம் என்பது, உண்மையில் எப்படிப்பட்டது? என்றெல்லாம் சிறிது கூட சிந்திப்பதில்லை.

ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு உந்துதலால், ஓயாமல் ஓடிக்கொண்டே இருக்கின்றோம். நமது உடலில் ஏதாவது பிரச்சனை வந்தாலும், அதைப்பற்றி நமக்குத் தெரியாது. அதனால், மருத்துவரை நாடிப் போகின்றோம். இது நம்முடைய உடல்தான் என்றாலும், அதைப்பற்றி எதுவுமே தெரியாது.

பொதுவாக, நமது வாழ்வு என்பது "**நான்**" என்கின்ற உடல் உணர்வைச் சுற்றி மட்டுமே உள்ளது. என் உடல், எனது வாழ்க்கை, எனது வீடு, எனது மக்கள், எனது செல்வம், எனது சந்தோஷம் என்று எல்லாமே என்னைச் சுற்றித்தான் உள்ளது.

'**எனது**', '**என்னுடையது**' என்பதைப் பற்றியே அதிகம் யோசிக்கின்றோம். அதை மட்டுமே தக்க வைத்துக் கொள்ள நினைக்கின்றோம். ஆனால், இந்த உணர்வுக்கெல்லாம்

ஆதாரமான “**நான்**” என்பது என்ன? என்பது பற்றி நமக்குத் தெரியாது.

என் உடலைப் பற்றி எனக்குத் தெரியாது என்பதைப் போன்று, எனது எண்ணங்களைப் பற்றியும், அந்த எண்ணங்களுக்கு ஆதாரமான, மனதைப் பற்றியும் நாம் அறியாதிருப்பதை ஒரு நாளும் உணர்வதில்லை.

இந்த உடலைப் பற்றியும், அதன் இயக்கத்தைப் பற்றியும் (எண்ணங்களின் ஓட்டத்தைத் தவிர) ஒருவிதமாக மருத்துவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். ஆனால், இந்த உடலுக்கும், அதில் தோன்றும் எண்ணங்களுக்கும் ஆதாரச் சக்தியைப்பற்றி, அறிவியலாளர்கள் கூட சரியாக இதுவரை அறிந்துக் கொள்ளவில்லை.

உடலில் தோன்றும் எண்ணங்களைப் பற்றியே சரியாக அறியாத அறிவியலால், அதற்கு ஆதாரமான “**நான்**” என்கின்ற உணர்வைப் பற்றியும், “**நான்**” என்கின்ற உணர்வு இல்லாத, அந்த ஆழ்ந்த உறக்கத்தைப் பற்றியும், அன்றாடம் இந்த உடல் இயக்கத்திற்குத் தேவையாக இருக்கும் சக்தியைப் பற்றியும், அறிவது என்பது, அறிவியலைப் பொருத்த வரை அரிதான விசயமே ஆகும்.

ஏனெனில், அறிவியல் புலன்களைக் கொண்டு அறியும் அறிவினை மட்டுமே கொண்டு, வெளி விஷயங்களை ஆராய்ந்துக் கொண்டிருப்பதால், அதனால், புலன்களைக் கடந்த உள் விசயமாக இருக்கின்ற, ஆன்மீகம் கூறும்

உள்ளுணர்வைப் பற்றியோ, அல்லது பேருணர்வாகிய ஆன்மாவைப் பற்றியோ, ஒன்றுமே அறியவில்லை.

இதில், சிலர் இந்த ஆன்மாவைப் பற்றி யோசிப்பதே இல்லை. இன்னும் சிலர் அதை யோசித்தும் பயனில்லை என்று விட்டு விட்டார்கள். மற்ற ஒரு சிலரோ, முன்னோர்கள் கூறியதை அப்படியே ஏற்று நம்பி வருகிறார்கள். இவர்களில் சிலர் விசாரித்து, அதை சிந்தித்து, சிலவற்றை ஒருவாறு புரிந்து வைத்துள்ளார்கள்.

எல்லோர் நம்பிக்கையும், புரிதலும் ஒன்று போல இல்லை. நிறையவே வேறுபாடுகள் உள்ளன.

ஆன்மா பற்றியும், பிரம்மம் பற்றியும் பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளில் மட்டுமல்ல, நாம் எல்லோரும் பின் பற்றுகின்ற மதங்களைத் தோற்றுவித்த முன்னோர்கள் கூறிய, தத்துவங்களில்கூட நிறைய வேறுபாடுகளையும், முரண் பாடுகளையும் நம்மால் இன்று நிறையவே காணமுடிகின்றது. மக்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப, ஒவ்வொரு கோணத்தில் அவைகளைப் பார்க்கின்றார்கள்.

இன்று பல்வேறு மதங்களைப் பின் பற்றி வாழ்கின்ற பலதரப்பட்ட மக்கள், அவரவர்களின் மதங்கள் மற்றும் மதக் கடவுள்களுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்.

அதன்காரணமாக, அவரவர்களுக்கு பிடித்தமான கடவுள்களை வேறு, வேறாகப் பிரித்து வைத்துக்கொண்டு வழிபடுகின்றார்கள். மேலும், அவர்களது தாய் தந்தை பின் பற்றிய மதத்தையே, தங்கள் மதங்களாக பெரும்பாலும் பின்பற்றுகின்றார்கள்.

வணங்கும் கடவுள்கள், வாழ்வியல் முறைகள், எனது மதம் என்கிற உணர்வு, பக்தி, பக்தியால் வரும் மகிழ்ச்சி, மத நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என இத்தகைய சில விசயங்களோடு மட்டும், நாம் அறிந்த மதமும், கடவுளும் முடிந்து விடுகின்றது.

மத நம்பிக்கையில் கடவுள் வழிபாடு முடிந்ததும், அதற்குப் பின்னால் வரும் “**நான்**”, “**எனது**”, “**என்னுடையது**”, “**எனது மட்டுமே சிறந்தது**” போன்ற எண்ணங்களும், அதனால் உண்டாகின்ற மனதின் சிக்கல்களும், அந்த மனதின் செல்விளைவுகளாக அனேக நடைமுறைச் செயல்களும், அதன் விசயங்களும், அவரவர்கள் சேகரித்து வைத்துக் கொண்ட எண்ணங்களின் தாக்கத்திற்கு ஏற்றவாறு, மட்டுமே வெளிப் படுகின்றதே தவிர, உண்மையில் மதங்கள் காட்டும், மனிதனை புனிதனாக்கும் மகத்தான மார்க்கத்தில், இவர்களது மனித வாழ்க்கை அமையவில்லை என்பதே உண்மை.

இந்தியாவில் தோன்றிய மதங்கள், மற்றும் கடவுள்களை விட தங்களுடைய தத்துவ கோட்பாடுகளை முன் நிறுத்தி, மக்களை அதில் முக்கியத்துவம் கொடுக்க வைத்ததின் நோக்கத்தை, நம்மில் எத்தனை பேர் அறிவோம்?

## அணுவும் ஆன்மாவும்

அனைத்து மதங்களும், மனிதனை புனிதனாக்கும் விதமாக, மனிதனுக்கு நன்மைகளையே போதித்தன. ஆனால், மனிதன் ஏன்? அத்தகைய நன்மைகளை எடுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தவில்லை.

தவறான புரிதல்களினால், தவறான வாழ்க்கையை ஏன் வாழ விரும்புகின்றான்? இத்தகைய மோசமான வாழ்க்கைப் பிடியில் சிக்கிக்கொண்டு, சிந்தை சீரழிந்தவர்கள் செய்கின்ற சீர்கேடான செயல்கள்தான் எத்தனை, எத்தனை? இன்றுவரை, இந்த உலகத்தில் நடந்தேறியுள்ளன.

உண்மையில், மதங்களுக்கோ, மதபோதனைகளுக்கோ, மதக்கடவுள்களுக்கோ, மதநல்லிணக்கங்களுக்கோ மனிதன் முக்கியத்துவம் கொடுக்காமல், மதவெறியர்களின் வீண் வார்த்தைகளுக்கு மட்டுமே, அதிக முக்கியத்துவம் கொடுத்து, மற்றவர்கள் கூறுகின்ற மதக்கோட்பாடுகளையும், மதக் கடவுள்களையும் அப்படியே பின்பற்றுகின்றனரே தவிர, அதன் பின்னனியில் மறைந்திருக்கும், மனதை அறியக்கூடிய மகத்தான அரிய பல, உண்மைகளை அறிந்து, அதன்படி நடக்க யாருமே தயாராக இல்லை.

புத்தமதம், சமணமதம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம் மற்றும் காணாபாத்தியம் போன்ற சன்மார்க்கங்களில், பெரும்பாலோனோரின் பின் பற்றுதலை பெற்ற மதங்களோடு அசீவகம், மாயாவாதிகள் போன்றவையும் தத்தம் மதக் கருத்துக்களை முன் நிறுத்தின.

அதுப்போக, சாங்கியம், யோகம் போன்றவை ஆன்ம விடுதலை பற்றி பேசின. அதற்குரிய வழிகளைக் கூறின. அதே போல், சைவமும் இறை பக்தியோடு முக்திக்கான தெளிவான வழிகளைக் கூறியது. இவைகளுக்குள் தத்துவத்தில் நிறைய வேறுபாடுகள் இருந்தன.

இதனால், அவரவர்களுடைய மதத் தத்துவங்கள், அந்த தத்துவங்களை கூறிய குருமார்கள், அதை தோற்றுவித்த மதத் தலைவர்கள் மட்டுமே மக்களுக்குத் தெரியுமே தவிர, அந்த தத்துவங்களின் முரண்பாடுகளை யாருமே ஆராயத் தயாராக இல்லை. அதை அப்படியே, அவரவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால், ஒரு சிலரோ, அந்த மதத்தை தோற்றுவித்த மகான்களின் உபதேசங்கள் இன்றைய நவீன நடைமுறை வாழ்க்கையில் சாத்தியம் இல்லை என்றும், காரணம் அவர்கள் வாழ்ந்த அந்தக் காலம் வேறு, நாம் வாழ்கின்ற இந்தக் காலம் வேறு என்று விளக்கமளிக்கின்றனர்.

எனவே, அவர்கள் கூறிய தத்துவங்களை, இன்றைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை என்பதினால், இன்றைய மதகுருமார்கள், இன்றைய கால கட்டங்களுக்கு ஏற்ப, சில புதிய மாற்றங்களை ஏற்படுத்திய, மத போதனைகளை மட்டுமே நடைமுறைப்படுத்துவது மிகவும் எளிது என்று, எதையுமே விசாரிக்காமல், அப்படியே அவர்கள் கூறுவதை நடைமுறைப் படுத்துவதினால், அந்த மதம் தன் மகத்துவத்தை இழந்து, இருந்த இடம் தெரியாமல், காணாமல் போனதையும் நாம் அறிகின்றோம்.

இதனால், அந்த மதங்களைப் பற்றியும், மத போதனைகளைப் பற்றியும் இன்றைய மக்கள் அறிந்துக் கொண்டுள்ள அனேக விசயங்கள் முற்றிலும், அந்த மத கோட்பாடுகளுக்கு விரோதமாகவே இருக்கின்றதையும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறு அனேக மதங்கள் மக்களின் மனதை காலத்திற்கு ஏற்றார்போல மாற்றி, அதன் உண்மை போதனைகளையும், மகத்துவத்தையும் அறியாமல், அதற்கு விரோதமாக என்னுடைய மதம் மட்டுமே சிறந்தது, என்னுடைய கடவுள் மட்டுமே உயர்வானவர் என்ற சர்ச்சைகள் உண்டாகி, நாளடைவில் அதுவே மதச்சண்டைகளாக மாறி, மத நல்லிணக்கத்திற்கு விரோதமாக மாறி, தன்னுடைய சகோதர, சகோதரிகளையே அழிப்பதில் ஆர்வமாக இருக்கின்றது.

இத்தகைய மோசமான சூழலுக்குக் காரணம், இவர்கள் மனதினால், மதவெறியர்களாக மனமாற்றம் செய்யப்பட்டு, தங்கள் மதங்களுக்காக, மதம் பிடித்த யானைப் போன்று, மற்ற மத மக்களிடம் அநாகரீகமாக நடந்து கொள்கின்றனர்.

எவன் ஒருவன் இந்த மதங்களைக் கடந்து, மகத்தான மனதின் உயர்பரிமாணமான புத்தி சக்தியைக் கொண்டு, விவேகத்தை விரிபடுத்திக்கொண்டு, அதன்வாயிலாக, மனதிற்கு ‘**விடுதலை**’ என்ற விசயத்தில் விருப்பம் கொள்கின்றானோ?, அவனே அழியாத ஆனந்தத்தை அடைகின்றான்.

விடுதலை என்றால், எதிலிருந்து விடுதலை? நம்மை யார் சிறை வைத்திருக்கின்றார்கள்? என்ற சந்தேகம் வருவது இயல்பே. உண்மையில், நம்மை நாமே, நம் மனதினாலேயே சிறை வைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அறியாமல் இருக்கின்றோம்.

இந்த மனச்சிறையிலிருந்து விடுதைப் பெற விரும்பும் சாதகன், உடனடியாக செய்ய வேண்டியது, தன் மனதை தானே விசாரித்து, அதன் எண்ணங்களை ஆராய்ந்து, அதில் உள்ள நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, இருமைகளில் இருந்து மனதை வெளியேற்றும் பொழுது மட்டுமே, இவனது விவேக சக்தி விழித்துக்கொள்கின்றது.

பொதுவாக, நாம் பூமியில் வசிக்கும் பொழுது, பூமியைச் சுற்றிலும் சுற்றுகின்ற **'காற்று'** என்ற மூலக்கூறுகளின் மகத்துவத்தைக் காண முடியாததைப் போல, தண்ணீரிலேயே வசிக்கின்ற மீன்கள் அந்த **'தண்ணீர்'** என்ற மூலக்கூறுகளின் அவசியத்தை அறியாததைப்போல, இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சத்திற்குக் காரணமான மூலக்கூறு **'ஒன்று'** ஆதிமூலமாக இருப்பதை அறியாமலேயே அனேக காரியங்களை செய்துக் கொண்டு வருகின்றோம்.

எப்போது, அதனை அறியும் அவசியம் நமக்கு உண்டாகும் என்றால், நாம் நம்முடைய அறியாமைகளை அறிந்துக்கொண்டு, அந்த பேருணர்வு நிலைக்குள் நுழைய முற்படும்போது மட்டுமே, நம்முடைய உண்மை சொரூபத்தைப் பற்றிய ஆர்வமும், அக்கரையும் நம்மிடையே உண்டாகின்றது.

உதாரணமாக, ஒருவனை நிலத்திலிருந்து தூக்கி, நீரினுள் ஆழமாக அழுத்தும்பொழுது மட்டுமே, அவனுக்கு காற்றின் அருமை அவசியம் என்று புரிகின்றது. அதுப்போல, ஒரு மீனை நீரிலிருந்து எடுத்து, நிலத்தின் மீது போடும்போது மட்டுமே, அந்த மீனுக்கு நீரின் அருமை புரிகின்றது.

அதுப்போல, நம்மிடையே மன உழைச்சல், மன நலம் பாதிப்பு, உடல்நலக் கேடு, உடல் உபாதைகள் என்று வரும் போது மட்டுமே, அதனைப்பற்றிய விழிப்புணர்வு உண்டாகிறது. அதுவரை அதைப்பற்றிய அக்கரை நமக்கு சிறிதுகூட வருவதில்லை.

இந்த உடல் இயக்கத்திற்கும், மன இயக்கத்திற்கும் ஆதாரமாக இருக்கும் ஒரு **பராசக்தி** எவ்வாறு, இந்த உடலையும், மனதையும் இயக்குகின்றது என்பதை நாம் இதுவரை அறிந்துக்கொள்ள முயற்சி எடுக்காமல் இருப்பதற்குக் காரணம், அதன் அவசியத்தை நாம் அறியக்கூடிய சந்தர்பம், இதுவரை நமக்கு உண்டாகவில்லை என்பதினால் மட்டுமே ஆகும்.

அதன் அவசியம் எப்பொழுது ஒருவனுக்கு உண்டாகும் எனில், அவனது வாழ்க்கையில் அனேக சுக, போகங்களினால் கிடைத்த சந்தோசங்கள் தகற்கப்படும் பொழுது, கவலை அவனை ஆட்கொண்டு, அனேக கஷ்ட, நஷ்டங்களை தாங்க முடியாமல் தவிக்கும் பொழுது மட்டுமே, தன்னுடைய இந்த

துயரத்திற்கான காரணத்தை, காண வேண்டிய கட்டாயம் அவனுக்கு எழுகின்றது.

அந்த நிலை வரும்பொழுது மட்டுமே, ஒருவன் **கடவுள், உலகம், உயிர், ஆன்மா** என அனைத்தையும் ஆராய முற்படுகின்றான். அதுவரை, ஒவ்வொருவரும் அதைப்பற்றிய அக்கரைக் கொள்வதில்லை என்பதே நாம் நடைமுறையில் காணுகின்ற எதார்த்தமான உண்மை.

இந்த மனச்சிறையில் இருந்து, மனிதன் விடுதலைப் பெறுவது ஒன்றே, இன்றைய மனிதனுக்கு மகத்தான சாதனை எனப்படுகின்றது. அது ஒன்றே, அந்த ஒன்றை அறியவும் அவசியம் ஆகின்றது.

எனவே, ஒவ்வொருவரும் தங்கள் மனதை தாங்களே அகத்தில் விசாரித்து, அதில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள ஏராளமான விசய, சுகங்களின் விளைவுகளைக் கலைந்து, மனதில் உதிக்கின்ற எண்ணங்களின் உண்மைத் தன்மையை உள்ளத்தில் உணர்ந்து, மகத்தான மனிதப் பிறவியின் மகோன்னதத்தை புரிந்துக் கொண்டு, அந்த ஏக இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்புறவேண்டும் என்ற நல்நோக்கத்தில், இந்த நூல் இங்கு வழங்கப்பட்டுள்ளது.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்**

# 1. அணுவும், இயக்கமும்

"**ஆறாம் அறிவு**" எது? என்ற கேள்வி எழும் பொழுது, அதை "**பகுத்தறிவு**" என்பார்கள் சிலர். பகுத்தறிவு என்றால் என்ன? என்று கேட்கும் பொழுது, நல்லது, கெட்டதை பிரித்து அறிவது என்று விளக்கம் சொல்வார்கள். இதற்கு மேல் கேட்கவும் தெரியாது, விளக்கவும் தெரியாது.

ஒரு மாட்டு மந்தையில் ஆயிரக்கணக்கான பசுக்கள் இருந்தாலும் கூட, கன்றுக்குட்டி தன்னுடைய தாய்ப்பசுவை சரியாக அடையாளம் கண்டு கொள்கிறதே? எதை உண்ண வேண்டும் என்று தெளிவாகத் தெரிந்து கொள்கிறதே? இதுதான் பகுத்தறிவா? என்றால், இல்லை. இவையெல்லாம் புலனறிவும், அதன் துணைக்கொண்டு பெற்ற அனுபவ அறிவும் மட்டுமே ஆகும்.

"பகுத்தறிவு என்பது ஒன்றின் மூலத்தை அறிவது ஆகும்."

**"காக்கை குருவி எங்கள் ஜாதி**
**நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்க களியாட்டம்"** என்று பாடினாரே பாரதியார்.

*அதில்,* '**கூட்டம்**' என்றும், '**களியாட்டம்**' என்றும் பாரதி குறிப்பிட்டது அணுக்களின் கூட்டமும், ஆட்டமும் ஆகும்.

எந்த ஒரு பொருளையும் பகுத்துக்கொண்டே சென்றால், இறுதியாக மிஞ்சுவது அணு மட்டுமே ஆகும். இந்த மொத்த பிரபஞ்சமும், அந்தப் பேரணுவில் இருந்து வந்தது என்கின்றது மெய்ஞானம்.

நம் சித்தர் பிரான் **திருமூலர்** இறைவனைப்பற்றி என்ன சொல்கிறார் எனப் பாருங்கள்,

**"அணுவின் அணுவினை ஆதிப்பிரானை**
**அணுவின் அணுவினை ஆயிரங் கூறிட்டு**
**அணுவின் அணுவினை அணுகவல்லார்க்கு**
**அணுவின் அணுவினை அணுகலுமாமே"**

கடவுளை, **அணுவின் அணுவே** என்று பாடுகிறார்.

இதையே விஞ்ஞானமும் இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களிலும் அல்லது எல்லாத் தனிமங்களிலும் (Elements) இருக்கும் அடிப்படைப்பொருள் **அணு** என்கின்றது.

இந்த அணுக்கள் **புரோடான்,** **நியுட்ரான்**, மற்றும் **எலக்ட்ரான்** ஆகியவற்றால் ஆனவை. இந்த அணுக்களை நாம் சாதாரண கண்களால் காண முடியாது.

தூணிலும், துரும்பிலும் கூட, இவைகள் இருப்பதால், இந்த அணுக்களுக்கு ஆதாரமாக, மற்றொரு மூல அணு இருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதி, அதற்கான சோதனையில் இறங்கினார்கள்.

இதன் விளைவாக, அந்த அணுக்களை இயக்கும் ஒரு பேரணு இருக்க வேண்டும் என்றும், அதைக்கண்டு பிடிப்பதில் தாங்கள் நெருங்கி விட்டதாகவும் இன்றைய நவீன விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

அந்த மூல பேரணுவையே "**கடவுள் துகள்**" (The God's Particle) என இன்றைய விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இதையே பட்டினத்தாரும் தனது பாடலில்

**"வாக்கும் மனமும் கடந்த மனோலயன் காண்!**
**நோக்க அரியவன் காண்; நுண்ணியரில் நுண்ணியன் காண்!"**

என்கின்றார்.

இத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குக் காரணமான அனைத்தையும் பகுத்தறியும மனிதனின் '**மனம்**' என்ற "**ஆறாம் அறிவு**" அவனின் உடலில் எங்கு இருக்கின்றது? அத்தகைய மனித மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத அந்த பேரணு எது?

அந்த அணுவின் மூலக்கூறுகள் ஒன்று சேர்ந்து உருவாகியுள்ள இந்த மனித உடலில் உண்மையானது என்று ஏதாவது இருக்கிறதா? சரித்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே இந்தக் கேள்விக்கு விடைதேடும் முயற்சி மனித மனத்தில் இருந்து வந்திருக்கிறது.

இந்த பரு உடலை ஆக்குவது எது? மூலக்கூறுகளை ஒருங்கிணைத்து உடலை உருவாக்குவது எந்தச்சக்தி? தன்னைச் சுற்றியுள்ள ஜடப்பொருள் தொகுதியிலிருந்து பல மூலக்கூறுகளை எடுத்து, எனது உடலை ஒருவிதமாகவும், மற்ற உடல்களை வேறு விதமாகவும் உருவாக்குவது எந்தச் சக்தி?

**இந்த எல்லையற்ற வேறுபாடுகளை எது உண்டாக்குகிறது?**

மூலக்கூறுகளின் சேர்க்கையான பருஉடலிலிருந்தே மனிதனின் ஆறாம் அறிவான "**மனம்**" எனப்படும் சூக்ஷும சக்தி தோன்றியுள்ளது என்று சொல்வது, குதிரைக்கு முன்னால் வண்டியை இணைப்பது போன்ற ஒரு தலைகீழான மூடச் செயலாகும்.

**அப்படியானால், இந்தச் சேர்கைகள் எங்கிருந்து வந்தன? இவற்றைச் சேர்க்கின்ற சக்தி எங்கே இருந்தது?**

இந்தச் சேர்க்கைக்குக் காரணம், வேறு ஏதோ ஓர் சக்தி ஆற்றல் என்றும், அந்த ஆற்றலே பஞ்ச பூதங்களின் மூலக்கூறுகளைத் திரட்டி உடலை உண்டாக்கியதென்றும், அந்த உடலின் உள் இருந்தே ஒரு சக்தி வெளிப்பட்டு, இந்த உடல்

இயங்குகின்றது என்றும் கூறுவதை வைத்து கவனிக்கும் பொழுது, '**இயக்கம்**' என்ற ஒன்று நடைப்பெற வேண்டுமானால், அதை இயக்கும் இயக்குனராக மற்றொரு **மகாசக்தி** இருந்தாக வேண்டும் என்பது அவசியமாகின்றது.

ஆகவே, இந்த உயிருள்ள மனித உடல் இயக்கத்தை, உயிரற்ற ஜட இயந்திரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

*உடலும் ஒரு இயந்திரம்தானே?*

ஒரு இயந்திரம் இயங்க '**சக்தி**' தேவை. அது ஏதோ ஒரு வகையில் தரப்படுகிறது. அதாவது, ஒரு இயந்திரம் இயங்க நேரடியாக மின் சக்தியோ, மின்கலன் சக்தியோ, அல்லது எரிபொருள் சக்தியோ அவசியம் என்பதை நாம் அறிவோம்.

அதுப்போன்று, உடல் என்ற இந்த இயந்திரம் இயங்க, உணவைத் தேவையான எரிபொருள் சக்தியாக மாற்றிக் கொள்ளுகின்றது என்பதிலிருந்து, ஒரு இயந்திரம் போன்றே இந்த உடல் உள்ளது என்பதை அறிகின்றோம்.

கார்கள் போன்ற வாகனங்களும், மின்சார ஜெனரேடர் போன்ற உபகரணங்களளும் எரிபொருள் இருந்தால்தான், அது ஓடிக்கொண்டே இருக்கும். அதற்கு '**உயிர்**' போன்ற ஒரு சக்தி அவசியமில்லையே என்று வாதிட்டாலும், ஏதாவது ஒரு காரோ, அல்லது ஜெனெரேடரோ தானாக உருவாகிக்

கொண்டதாகவோ, தானாக இயங்கிக் கொண்டதாகவோ யாரும் கூற முடியாது.

அதாவது, அவைகளை உருவாக்க ஒரு மனிதன் தேவை. மேலும் மனிதர்களில் யாராவது ஒருவர், அவைகளை இயக்க வேண்டியுள்ளது அல்லவா? எரிபொருளின் தேவை அறிந்து, அதை அந்த இயந்திரத்தில் சேர்க்க, அதற்குப் புறத்தில் அறிவுள்ள ஒரு மனிதன் தேவை உள்ளது அல்லவா?

ஆகவே, கார் போன்ற ஒரு இயந்திரத்தின் இயக்கத்தை இயக்க, அதற்கான ஒரு இயக்குனர் என்ற மனித **'சக்தி'** தேவையாயிருப்பதை நாம் அறிவோம்.

அதுப்போலவே, நாம் உண்ணும் உணவை, இந்த உடல் இயக்கத்திற்கு தேவையான எரிபொருள் சக்தியாக இந்த உடல் தானாகவே மாற்றிக் கொண்டாலும், அந்த எரிபொருளை அந்த உடல் என்ற இயந்திரத்தில் சேர்க்க, அறிவுள்ள ஒரு மனிதன் அந்த உணவை உட்கொள்ள வேண்டும். அதாவது, அந்த அறிவுள்ள ஒரு இயக்குனராக, சக்தியாக இந்த **'உயிர்'** உள்ளது என உணரலாம்.

சாதாரணமாக, ஒரு இயந்திரத்தின் இயக்கம் எப்போது நின்று போகிறது?

அந்த இயந்திரத்தில் ஏதோ ஒரு பாகமோ, பொருளோ பழுதடைந்தாலும், அல்லது ஏதோ ஒரு இடத்தில் இணைப்புத் தொடர்பு விட்டுப் போனாலும், அல்லது எரிபொருள், மின்சக்தி

இல்லாமல் போனாலும் மட்டுமே, அந்த முழு இயந்திரத்தின் ‘**இயக்கம்**’ நின்று போகின்றது.

அதுப்போலவே, இந்த மனித உடலிலும் ‘**உயிர்**’ என்ற சக்தி இல்லாமல் போனால், அந்த உடலின் ‘**இயக்கம்**’ நின்று போகின்றது.

ஆகவே, சில சக்திகளை அதன் பயன்பாட்டைக் கொண்டு நாம் அறிகின்றோம். ஆனால், அப்போதெல்லாம் நாம் கேள்வி கேட்காமல் எற்றுக் கொள்கிறோம்.

உதாரணமாக, புவியீர்ப்புவிசை.

அது அளவாக அளக்கப்பட்டதெல்லாம் பிற்பாடே.

ஆனால், அப்படி ஒரு புவியீர்ப்பு சக்தி உண்டு என்பதை முன்னரே நாம் அறிந்திருந்தோம். அணுவிற்குள்ளும் அப்படிப்பட்ட சக்தி உண்டு என்று நாம் அறிவோம். இவற்றை எல்லாம் அதன் செயல்பாடுகளால்தான் நாம் அறிகின்றோம். ஆக, இயக்கசக்தி உண்டு என்பது, பொது விதி என்பதை அனைவரும் அறிவோம்.

அப்படியிருக்க, இந்த உடல் இயக்கம் உண்டாக, அதற்கான ஒரு சக்தி தேவை என்று அறிகின்றோம். அதாவது, இயங்கும் உடலே, அதை இயக்க ‘**சக்தி**’ ஒன்று வேண்டும் என நிரூபிக்கின்றது. அவ்வாறு, அந்த நோக்கத்தோடு இயங்கும்

சக்தியின் பின்னால், ஒரு அறிவும் (ஆன்மாவும்) அவசியம் இருக்க வேண்டும்.

**"வெறும் 'சக்தி' அஞ்ஞானம். வெறும் 'அறிவு' சக்தியற்றது". ஆக, அறிவும், சக்தியும்** சேர்ந்த **'இயக்கம்'** மட்டுமே இயல்பானது.

ஜடப்பொருளாக நாம் உண்ணும் உணவைக் கொண்டு, இந்த உடலை வளர்க்க உண்டாக்கும் **'சக்தி'** எதுவோ?, அதுவேதான் உடல் இயங்கத் தேவையான **'அறிவு'** ஆகவும் இருக்கின்றது.

அதாவது, ஜடப் பொருளிலிருந்து **'சக்தி'** மட்டும் பிறக்க முடியாது. சக்தி பிறக்க, அதனை இயக்கும் இயக்குனரான **"உயிர்"** என்ற **'உணர்வு'** அல்லது **'அறிவு'** அவசியமாகின்றது.

சிலர், இந்த உடல் என்னும் இயந்திரம் இயங்க, அதற்கான ஒரு **'சக்தி'** தேவைதான். ஆனால், அது **"உயிர்"** என்று கருதத் தேவையில்லை என்கின்றனர்.

சக்தி நாம் உண்ணும் உணவிலிருந்து பெறப்படுகிறது. உடல் அணுக்களில் சக்தி சேமிக்கப்படுகின்றது. அந்த சக்தியே செயல் செய்ய உதவலாம். ஏன்? அந்த சக்தியை **"உயிர்"** என்று எண்ண வேண்டும்? அந்த சக்தி உணவின் மூலம் பெறப் படுவதாகக் கொள்ளக் கூடாதா? என்று வாதிடுகின்றனர்.

அணுக்களின் ஒட்டுமொத்த அத்தனை சக்தியையும் கொண்டு, ஒரே சக்தியாகத்தான் நாம் செயல்படுகின்றோம். சிந்திக்கிறோம். நம் அனைவருக்கும் ‘**நான்**’ என்கிற உணர்வு ஒன்றுதான். ஒவ்வொருவருக்குள்ளும் ஒரே “**நான்**” என்கிற உணர்வு மட்டுமே உள்ளது.

எப்படியாகிலும் ‘**நான்**’ என்கிற உணர்வு கொண்டு, ஒரு ஆளாக அல்லது மனிதனாக நாம் செயல்படுவதால், அனைத்து அணுக்களிலும் சேமிக்கப்பட்ட ஒரு சக்தி கொண்டு, ஒரே “**உயிர்**” தான் செயல்படுகின்றது என்று நாம் நன்கு உணரலாம்.

எப்படி ஒரு இயந்திரம் இயங்க, அந்த இயந்திரமும், அதற்கான சக்தியாக, வேறொரு விசயமும் தேவையோ?, அவ்வாறேதான், மனித உடலிலும் விசயங்கள் தேவையாய் இருக்கின்றன.

உடல் என்ற இயந்திரம், நாம் உண்ணும் உணவாகிய எரிபொருள் என இந்த இரண்டும் இருந்தாலும், இதைத்தவிர வேறு ஒன்றின் உதவியால்தான் நமது உடல் சிறப்பாக இயங்குகின்றது.

உடலின் இயக்கத்திற்கு அறிவியல் கூறுவதுப் போன்று, உடலாகிய இயந்திரமும், எரிபொருளாகிய உணவும் மட்டுமே போதுமானதாகக் கருதினாலும், அந்த உடலில் உண்டாகும் எண்ணங்களுக்கும், உடலுக்குமான தொடர்பு என்ன? என்பதையும் நாம் ஆராய வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த பருஉடல் எவ்வாறு வெவ்வேறு நிலைகளை அடைகின்றது என்று அறிவியலால் கூற முடியாது. ஆனால், நமது ஞானியர்கள் இதை உணர்ந்து கூறியிருக்கிறார்கள்.

நாம் அறியும் அறிவில், தன்னை அறியும் "**நான்**" என்கிற உணர்வும், பிற எண்ணங்களும் அடக்கம். உடல் இயக்கம் நடைப்பெறும் பொழுது, (கொஞ்சம் வேறுபாடு இருந்தாலும்) நம்மை நாம் அறிவதும், அறியாததுமான இரு நிலைகளை (விழிப்பு, உறக்கம்) நாம் பெறுகின்றோம்.

உடல் இயக்கம் நின்றுபோன இறப்பின் போது, **அறிவது** என்பது அங்கு நடைப்பெறவில்லை. ஆகவே, இந்த உடல் இயக்கத்தில் மட்டும்தான் **அறிவும், அறிவதும்** ஆகிய இரண்டும் நடைப்பெறுகின்றது. இந்த இரண்டின் மூலம்தான் **அறியப்படும் பொருள்** என்ற மூன்றாவது ஒன்றும் உண்டாகின்றது.

ஆக, **அறிவு, அறிபவன், அறியப்படுவது** என்ற மூன்றும் இந்த உடலின் இயக்கத்தின் வாயிலாகவே உள்ளது.

எனவே, உடல் இயக்கத்திற்கும், அதை அறிவதற்கும் ஆதாரமான மற்றொன்று உண்டு. அதைத்தான், "**நான்**" என்று நாம் அறிய வேண்டும்.

# 2. உள்ளுணர்வும், பேருணர்வும்

பொதுவாக, **மனம்** என்பது ஏராளமான எண்ணங்கள், ஆசை உணர்வுகள், விருப்பு, வெறுப்புகள் போன்ற இவைகளின் ஒட்டுமொத்த தொகுப்பு ஆகும்.

நான் நேற்று ஒன்றை விரும்பினேன், அதைப்பற்றிய எண்ணங்களும், ஆசைகளும் கொண்டிருந்தேன். பிறகு சிறிது காலம் கழித்து, அதே விசயத்தை வெறுத்தேன். அந்த விசயம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். இது எல்லோருக்கும் நேரக்கூடிய சாதரணமான நடைமுறை ஒன்றுதான்.

அந்த எண்ணங்கள், உணர்வுகள், விருப்பங்களாக இருந்த மனம்தான் அன்று "**நான்**" என்றால், இன்று அவைகளை விரும்பாமல் இருப்பது, வேறொரு '**நான்**' என்றல்லவா ஆகிவிடுகின்றது?

ஆகவே, இங்கு **விருப்பு, வெறுப்பு** என்பது மனம் சார்ந்த விசயமாக மட்டுமே இருக்கின்றதே தவிர, இந்த இரண்டுக்கும் இடையில் இருமைகள் ஏதுமில்லாத மாறாத ஒன்றாக இருப்பது எதுவோ?, அதுவே, "**நான்**" ஆக இருக்க முடியும்.

ஆக, விரும்பிய மனம் மடிந்து, முற்றிலும் விரும்பாத மாறுபட்ட வேறொரு மனம் என்னுள் தோன்றிவிட்டது.

அதில், "**நான்**" என்கிற ஒன்று, அன்று இருந்த மனதையும், இன்று இருக்கின்ற மனதையும் எப்போதும் அறிந்துக் கொண்டே இருக்கின்றது.

ஆக, "**நான்**" *என்பது புத்தியா?*

புத்தி என்பது ஆராய்ந்து தெளியும் எண்ணங்கள் தான். குழந்தையாக இருந்த போது, ஒன்றை ஒருமாதிரி புரிந்து வைத்திருந்த அந்த அறிவு, பெரியவர்களானதும் வேறொன்றாக அதையே அறிகின்றது.

அதனால், புத்தி என்பது, அலசி, ஆராய்ந்து தீர்மானம் செய்யும் எண்ணங்கள் என்பதினால், இங்கு **புத்தி** என்பதும் எண்ணங்களின் மேம்பட்ட சிந்தனையே ஆகும்.

ஒரு விசயத்தைப் பற்றி, வெவ்வேறு விதமாக, வேவேறு கோணங்களில் தீர்மானம் செய்ததும் எனது புத்தியே. ஆகவே, புத்தியாக வரும் மேம்பட்ட எண்ணங்களும் மாறும் தன்மையுடையன என அறிகின்றோம்.

புத்தி என்பது "**நான்**" என்றால், முதலில் ஒருமாதிரி தீர்மானம் செய்திருந்த '**நான்**' அழிந்து, புதிய '**நான்**' பிறந்து விட்டதாகக் கொள்ள வேண்டும். ஆனால், உண்மை

என்னவெனில், இந்த இரண்டு நாளையும், "**நான்**" நினைவில் வைத்துள்ளேன்.

என்னுள் உண்டாகிய இரண்டு மனங்களையும் x இரண்டு புத்திகளையும், ஏன், பல மனங்களையும் பல புத்திகளையும் "**நான்**" அறிவேன்.

ஆக, **நான்** என்பவன் **அறிபவன்.**

**அறியப்படுவது** மற்றும் **அறிவைத்தருவது** என்பது, எண்ணங்களால் எழுந்த **மனம்.**

ஒருநேரம் ஒன்றைப்பற்றி எண்ணி, மறுநேரம் மற்றொன்றைப் பற்றி எண்ணுவதிலிருந்து, எதை இதுவரைப் பற்றியிருந்தோமோ, அந்த எண்ணமோ, மனமோ நானல்ல! என்பது, நம்மிடம் உள்ள மனதின் மேம்பட்ட சக்தியான பகுத்தறியும் புத்தியின் மூலமாகத் தெளிவாகின்றது.

இதில் மனமாக வரும் எண்ணங்களும், புத்தியாக வரும் எண்ணங்களும் மாறுபடுகின்றன. அதனால், அவைகளல்ல "**நான்**" என்பதை நாம் நன்கு அறிகிறோம்.

"**நான்**" என்கிற உணர்வுதான் மாறாமல் உள்ளது. அது மாறாமல் இருந்து பிறமாற்றங்களை அறிகிறது. அதுதான் நானா?

ஆம்! இங்கு "**நான்**" என்பது சுய உணர்வு.

அந்த உணர்வு, எதைப்பற்றுகிறதோ?, அதை தானாக எண்ணுகிறது.

தன் புத்தியிலிருந்து, மனதிலிருந்து, உடலிலிருந்து, இனம், மதம், மொழி, கொள்கைகள், விருப்பங்கள் என்று இவைகளில் எதைப் பற்றினாலும் அதை தானாக, தனதாக எண்ணுகின்றது.

ஆகவே, அது பற்றி நிற்கும் யாவும், மாறும் தன்மையுடையன என்பதை கவனிக்கவும்.

இதிலே, "**நான்**" என்னும் ஒன்று மட்டும் எப்போதும் மாறவில்லை என்பதை அறிகிறோம்.

அதாவது, சிறு வயதிலே இருந்த உடல் இன்று இல்லை. அப்போது, அப்படி இருந்தேன் என்று அறிந்த **நான்** இப்போது இப்படி மாறி விட்டேன் என்று அறிகிறது. நேற்று அழுதேன், இன்று சிரிக்கிறேன் என்று உணர்கின்றது.

ஆக, அனைத்தையும் அறியும் அந்த ஒன்று மட்டும் எப்போதும் மாறாமல் இருக்கின்றது.

"**நான்**" என்கிற சுய உணர்வு மாறாமல் உள்ளது.

அது, அறியும் தன்மையுடையது.

மனம், புத்தி, உடல் என எது மாறினாலும், **நான்** என்கிற **சுய உணர்வு** மட்டும் எப்போதும் மாறாமல் உள்ளது.

ஆனால், உண்மையில் அந்த "**நான்**" என்கிற சுய உணர்வு தான் நானா? என்றால், இல்லை!

ஏனென்றால், என்னை நான் உணர முடியாத ஆழ்ந்த உறக்கத்தில்கூட, இந்த **நான்** இறந்து விடாததால், அந்த "**நான்**" என்கிற உணர்வும் உண்மையில் "**நான்**" இல்லை.

அப்படியானால், உண்மையில், "**நான்**" என்பது என்ன?

அதாவது, தன்னிடம் உள்ள சுய உணர்வு, சுய அறிவு என்பதெல்லாம், அந்த பேருணர்வு அல்லது பேரறிவு என்ற **பேரண்ட உணர்வு.**

அதுமட்டுமே, "**நான்**" என்று எல்லாவற்றிலும் இருந்துக் கொண்டு, தன்னைத்தானே எல்லாமாக அறிகின்றது. அறிவு உணரும் முதல் உணர்வு அது.

ஆனால், "**சுய உணர்வு**" அல்லது '**சுய அறிவு**' என்பது தூங்கும்போது மறைந்து, விழிக்கும்போது தோன்றும், மன இயக்கத்திற்கும் மற்றும் இந்த பரு உடல் உருவானதிலிருந்து இறக்கும்வரை தொடரும், மனோ இயக்கத்திற்கும், உடல் இயக்கத்திற்கும் ஆதாரமான ஒரு சக்தியாக மட்டுமே உள்ளது என்பதை இதிலிருந்து நம்மால் அறிய முடிகின்றது.

ஆனால், என்னுள் எழுகின்ற எண்ணங்கள் என்பது என்னிலிருந்து வேறானதல்ல.

அதாவது, **நான்** இல்லாமல் அங்கே எண்ணங்கள் இல்லை.

எண்ணங்கள் என்பது இயக்கமே.

நாம் சுவாசிக்க, சுவாசிக்க "**நான்**" தோன்றி எண்ணங்களாக நாம் உருமாறிக் கொண்டே இருக்கிறோம்.

எந்த இடத்தில் "**மனம்**", தான் என்கிற உணர்வு பெற்று, அது எண்ணங்களாக உருமாறி, இயங்கிக்கொண்டே இருக்கிறது என்பதை நமது ஞானியர்கள் உணர்ந்துள்ளார்கள்.

ஆன்மா என்பது **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** இவைகளுக்கு வேறானது. ஆனால், அனைத்தையும் அறிவதும் அதுவே.

புத்தி என்பது வேறொன்றுமல்ல. அது மூளையின் திறனே.

அனைத்தையும் ஆய்ந்து பார்க்கும் திறன் மனதின் மேம்பட்ட சக்தியாக மாறும் புத்தி சக்தியின் மூலம், அது பரு உடலிலுள்ள மூளையின் துணைக்கொண்டு, பகுத்தறிந்து, ஒவ்வொன்றையும் சித்தத்தில் சேகரித்து வைத்துக் கொள்ளக்

கூடிய பல்வேறு ஞாபகங்களின் ஒட்டுமொத்த ஒரு கட்டமைப்பாகும்.

ஆகவே, உண்மையான "**நான்**" என்று ஒன்று, அதை அறியத் தேவையில்லை என்று கூறுவாரும் உண்டு. புத்தரின் கூற்றும் அதுவே. அதாவது, அறிவது '**புத்தி**' என்பதினால், **ஆன்மா** அவசியமில்லை என்பது அவரது கூற்று.

ஆனால், **சித்தம்** என்று கூறப்படுகின்ற ஒட்டு மொத்த எண்ணங்களின் சேகரிக்கப்பட்ட தொகுப்புகளான ஏராளமான எண்ணப்பதிவுகளும், மனித மூளையில் பிறப்பு முதல் இறப்பு வரை, எல்லா ஞாபகங்களும் சேமிக்கப்பட்டிருந்தாலும், அந்த மூளையில் உள்ள செல்கள் அழியும்போது, அவ்வாறு, அழிந்த ஞாபகங்கள் போக மிச்சமுள்ள ஆயிரக்கணக்கான ஞாபகங்கள் இன்னும் மூளையில்தான் இருக்கின்றன என்கின்றது நவீன அறிவியல்.

அதனால், அவைகள் அனைத்தையும் ஒரே நேரத்தில், ஒட்டு மொத்தமாக நாம் அறிவதில்லை. ஒரு நேரம் ஒன்றை மட்டுமே நாம் அறிகிறோம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கண்கள் எப்போதும் பார்த்துக் கொண்டே இருந்தாலும், அப்படி பார்க்கின்ற அனைத்தையும் நாம் அறிவதில்லை. காரணம், அப்படிப் பார்க்கும்போது, அந்த இடத்தில் நம்முடைய **மனம்** அதில் ஒன்ற வேண்டும் என்கின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

அதாவது, அதை அறிவதற்கு ஒரு ஆணை நம் உள்ளிருந்து வரவேண்டியுள்ளது. அதுப்போலவே, புத்தி ஒன்றை பகுத்தறிவதற்கும் நம்முள்ளே இருந்து, அந்த நேரம் அதை அறிவதற்கு ஆணை பிறப்பிப்பது, அவைகளை அறிவது எது?

இந்த மனமா? அல்லது புத்தியா?...

மனம் என்றால், அது எண்ணங்களின் தொகுப்பு. தூங்கும் போது, கற்பனை எண்ணங்களைக்கூட கனவில் உண்டாக்கிக் கொள்கின்றது. அதே மனம் நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் வெளிப்படவில்லை என்பதினால், அங்கே எந்த எண்ணங்களும் எழுவதும் இல்லை.

அவ்வாறே, எது சரி? எது தவறு? என்று பகுத்தறியும் புத்தி என்பது மூளையின் துணைக்கொண்டு செயல்படுவதால், ஒரு மனிதன் இறக்கும் போதும், உடல் என்னும் இயந்திரத்தின் மூளை என்னும் பாகம் அப்படியே இருந்தாலும், அந்த புத்தி சக்திக்குத் தேவையான ஆணை வரவில்லை என்பதினால், அங்கு அறிவதற்கு புத்தியும் வேலை செய்யவில்லை.

கண் எப்படி கருவியோ? பார்ப்பது என்பது எப்படி அதன் செயலோ? அதுப்போல, ‘**புத்தி**’ என்பது மூளையின் துணைக்கொண்ட மனதின் ஒரு மேம்பட்ட ஆற்றல் என்று கூறலாம்.

ஆக, அந்த ஆணை பிறப்பிக்கும் சக்தி எது?

எனவே, "**நான்**" என்பவன் அறிபவன் என்ற சக்தியோடு இணைக்கப்பட்டவன் என்பதினால், அவன் அனைத்தையும் பற்றும் தன்மையுள்ளவன் என்று தெளிவாகிறது.

**மனம், புத்தி** போன்றவைகள் நானல்ல! என்று மாறி, மாறி வரும் எண்ணங்கள் நிரூபிக்கின்றன. ஆகவே, "**நான்**" என்பது புத்தியும், மனமும் அல்ல! என்பது, இங்கு நிரூபணம் ஆகின்றது.

இந்த நிலையில்தான், "**நான்**" என்பது, இந்த உடல் அல்ல. மனம் அல்ல. இந்த உடலையும், மனதையும் இயக்குக்கின்ற ஒரு **மகாசக்தி** என்பதை புரிந்துக்கொள்ள முடியும்.

அவ்வாறு புரிந்துக் கொண்டால், அது எந்தச் சக்தியாக இருந்தாலும், அணுக்களின் மூலக் கூறுகளின் வாயிலாக, மனித உடல் போன்ற பல உருவங்களை அது படைக்கின்றது. அவ்வாறு படைக்கப்பட்டவைகளை மனதின் மூலம் கையாளுகின்றது என்பதையும் அறிய முடியும்.

ஆகவே, இவைகள் அனைத்திற்கும் ஆதாரமான அந்த மூல அணுவே, **ஆன்மா** அல்லது **பரமாணு** எனப்படுகின்றது.

ஆக, அந்த ஆன்மாவே அனைத்திலும் பரவி உள்ளும், புறமும் விரிந்திருக்கின்றது.

# 3. சுயம்பிரகாச அறிவு

உங்களுக்காகவும், எனக்காகவும் வேறு யாரும் வந்து உடல்களைப் படைப்பதில்லை. எனக்காக வேறு ஒருவர் உண்பதை நான் பார்த்ததில்லை. நான் உண்ட உணவை ஜீரணம் செய்து, அதிலிருந்து என் உடம்பிற்கு வேண்டிய ரத்தம், எலும்பு போன்ற தாதுப் பொருட்களை நான்தான் பெற வேண்டும்.

**இந்த மர்மமான சக்தி எது?**

பண்டைய சாஸ்திரங்கள் அந்தச் சக்தியைப்பற்றியும், அந்தச் சக்தியின் வெளிப்பாட்டைப்பற்றியும் கூறும்பொழுது, அந்தச் சக்தி '**சுய அறிவு**' மிக்கது. அந்த சுயம்பிரகாச அறிவு இந்த பரு உடலை இயக்கத் தேவையான அத்தனை அம்சங்களையும் கொண்டது. இந்த உடல் அழிந்த பின்னும், அதுமட்டும் அழியாமல் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியது என்கின்றன.

அத்தகைய ஒளிமிக்க சக்தியான அந்த '**சுய அறிவு**' அந்த மூலச்சக்தியின் பிரதிநிதி அல்ல.

உருவமுள்ள எதுவுமே மூலக்கூறுகளின் சேர்க்கையால் தோன்றியதாகத்தான் இருக்க முடியும்.

அதாவது, அந்த உருவம் அலல்து வடிவம் இயங்க, அதன்பின்னால் ஒரு சக்தியும் இருக்க வேண்டும்.

இந்த ஸ்தூல உடலை இயக்குவதற்கு, உடலல்லாத ஒன்று தேவைப்படுவதுப் போன்று, நம் மனதை இயக்குவதற்கும் அதன் பின்னால், ஒரு அறிவு இருந்தாக வேண்டும். அதுவே, இந்த பரு உடலில் **சுய அறிவு** அல்லது **சுய உணர்வு** என்றும், இந்த பேரண்ட உடலில் **பேரறிவு** அல்லது **பேருணர்வு** என்றும் கூறலாம்.

அதாவது, தன்னிடம் உள்ள சுய அறிவு மூலமாக இந்த ஸ்தூல உடலை இயக்கும் சக்தியும் அந்த பேரறிவான ஆன்மாவிற்கே உரித்தானது ஆகும்.

அந்த அழியாத '**சுய அறிவு**' அழியக்கூடிய பரு உடலில் மனதின் மூலம் வெளிப்பட்டு, தன்னைத் தான் அறியக்கூடிய நிலையில், **அறிபவன், அறிவு, அறியப்படுவது** என்பதாக, பேரண்ட உணர்வாக, பேருணர்வு அல்லது பேரறிவு கொண்ட ஆன்மாவாக எங்கும், எதிலும் வியாபித்து உள்ளது.

இந்நிலையில், **உணர்வு, மனம், புத்தி** போன்ற தொடர்புகள் அற்று இருப்பதால், அது **தூய உணர்வாக** இருந்து, தன்னை அவ்வாறே (தூய உணர்வாக) அறிகிறது.

இந்நிலையில், எது எதை அறிகிறது?, எது அறிவது?, எது அறியப்படுவது?, என்றெல்லாம் கூறுவது மிகவும் கடினம்.

ஏனென்றால், தூய சுய-உணர்வு (பேருணர்வு அல்லது அண்ட-உணர்வு) நிலையில் **அறியும் பொருள், அறியப்படும் பொருள் இரண்டும்** அதுவே.

அதாவது, **அறிபவனும், அறியப்படும் பொருளும்** ஒன்றே.

ஆக, **மொத்த-உணர்வு** தன்னைத்தானே அறிவதாகும்.

ஏதோ ஒன்று இருக்கிறது.

அது **"நான் இருக்கிறேன்",** (அஹம் அஸ்மி) என்று தன்னைத் தானாக அறிகின்றது.

இதுவே, உலகளாவி இருக்கும் '**இருப்பின்**' சுய-உணர்வு அல்லது **ஆத்ம-உணர்வு** (Self-Consciousness of Universal Being).

**அதுவே இருப்பு-உணர்வு** (Being-Consciousness).

அத்தகைய இருப்புணர்வை, பேருணர்வை அல்லது பேரறிவை அறியக்கூடிய **சுய அறிவு** நம்மிடம் "**மனம்**" மூலம் அறியப்படுகின்றது.

இந்த மனதின் மூலம் எது? எதை அறிகின்றது? என்று பகுத்து ஆராய்ந்தால், "**மனதின் மூலம் அந்த அறிவு**" என்பது தன்னைத்தான் அறிய முற்படுகின்றது என்பது புரியும்.

அதாவது, நம் உடலில் சுழன்று கொண்டிருக்கும் கோடானு கோடி உயிர்த்துகள்களின் தற்சுழற்சியால் தோன்றும் ஒளி அலைகளின் ஒட்டுமொத்த தொகுப்பானது, அவைகளின் இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கின்ற பேருணர்வின் மூலம் இந்த பரு உடலை இயங்குகின்றது.

அதாவது, என்றும் அழியாத, எல்லையற்ற பேரறிவுப் பிரகாசம் என்பது, ஒரு எல்லைக்குள் அழியக்கூடிய பரு உடலில் பட்டு, மனமாகப் பிரகாசிக்கும்போது, அது ஒரு குறுகிய சக்திக்கு உட்பட்டதுப் போன்று காணப்படுகின்றது.

அதாவது, பேரறிவின் சுயம்பிரகாச ஒளி அலையே, சுய அறிவு, உள்ளுணர்வு, தன்னுணர்வு அல்லது விழிப்புணர்வு என்ற அதன் எல்லையற்ற சக்தி, இந்த பரு உடலின் மூலம் **மனம், புத்தி, சித்தம், அஹறங்காரம்** மற்றும் **உள்ளம்** என்பதாக வெளிப்படுகின்றது.

"**இந்த மனதின் மூலம் எது?**" என, பகுத்து ஆராய்ந்தால், இந்த "**மனதின் மூலம் ஒன்றுமற்ற வெட்டவெளி** அல்லது **இறைவெளி**" என்பதை எளிதாக அறிய முடிகின்றது.

## அணுவும் ஆன்மாவும்

‘**இறைவெளி**’ என்பது, இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற அனைத்து உயிரினங்கள் உட்பட, எல்லா தோற்றங்களுக்கும் மூலமாக இருப்பது.

இந்த மனம் உதித்த இடமும், ஒடுங்கும் இடமும் அதுவே ஆகும். அதைத்தான் நாம் “**ஆன்மா**” என்று அழைக்கின்றோம்.

அந்த ஆன்மாவையே,

*பேராற்றல்
*பேரறிவு
*சிவம்
*சக்தி
*சுத்தவெளி
*வெட்டவெளி
*இயற்கை
*இறைவன்
*கடவுள்
*தெய்வம்
*ஆண்டவன்
*அருட்பெருஞ்சோதி
*ஆதிமூலம்
*அல்+இலாஹ்=அல்லாஹ்
*கர்த்தர், பிதா, யகோவா என்றவாறு "**ஒரே மூல ஆற்றலை**" அவரவர்கள் மொழியில் வெவ்வேறு பெயரிட்டு பலவாறாக அழைக்கிறார்கள்.

ஆக, "**ஆறாவது அறிவு**" என்பதன் சிறப்பு யாதெனில் ஒன்றை பகுத்து ஆராய்ந்து, அதன் "**மூலத்தை கண்டறிவது**" ஆகும். அந்த மூலத்தைக் கண்டறிந்தவர்களைத்தான் ஞானிகள், சித்தர்கள், அறிவர்கள், யோகிகள், மகான்கள், என்று அழைக்கின்றோம்.

அந்த ஆதிமூலமான ஆன்மா அனைத்திற்கும் அப்பாற்பட்டது. ஆன்மா மனமும் அல்ல!, புத்தியும் அல்ல!, அதுவே, மனத்தை இயக்கி, மனத்தின் மூலம் உடலையும் இயக்குகின்றது. இந்த ஆன்மா எதுவாக இருந்தாலும், எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் சரி!. அது, உண்மையில் உருவமற்றது.

ஆன்மாவை அறிய ஆர்வமாக உள்ள சிஷ்யனுக்கு குரு உபதேசிக்க விரும்புகின்றார். அந்த உபதேச உரையாடல் பின்வருமாறு அமைகின்றது.

குழந்தாய்! ‘**ஆலம் பழம் ஒன்றைக் கொண்டு வா**’
‘இதோ அய்யனே’
‘அதைப் பிள’
‘பிளக்கப்பட்டது அய்யனே’
‘அங்கு என்ன காண்கிறாய்?’
‘அணு வடிவான விதைகள், அய்யனே’
‘குழந்தாய்! அவற்றுள் ஒன்றைப் பிள’
‘பிளக்கப்பட்டது அய்யனே’
அங்கு என்ன காண்கிறாய்?’

“ஒன்றுங்காணவில்லை” என்கின்றான் சிஷ்யன்.

குரு, சிஷ்யனை நோக்கிக் கூறுகின்றார்.

எந்த சூக்சும பொருளை நீ காணவில்லையோ?, அந்த சூக்சும பொருளிலிருந்தே இந்த மிகப் பெரிய **ஆல மரம்** உண்டாகி நிற்கின்றது.

குழந்தாய்! **அதில் மட்டும் சிரத்தை வைப்பாய்.**

அணு மாத்திரமான அந்த ஸூக்சுமப் பொருள் எதுவோ? **அதுவாக நீயே உள்ளாய்** (தத்-துவம்-அஸி).

ஆக, எது உருவமற்றதோ?, அது எங்கும் நிறைந்ததாகத்தான் இருக்கமுடியும் என்ற ஆழமான கருத்தை எல்லா தத்துவப் பிரிவுகளும் ஒப்புக் கொள்கின்றன.

மனம் என்பது இருக்கும் வரைதான், **காலம், இடம்** ஆகியவைகளும் இருக்கும்.

காரணகாரிய நியதியும் காலத்திற்குக் கட்டுப்பட்டதே.

ஒன்றையொன்று தொடர்ந்து வருகிறது என்ற கருத்து இல்லாமல், காரணகாரியத் தொடர்பு இருக்க முடியாது. எனவே **காலம், இடம், காரண, காரியங்கள்** எல்லாம் மனத்தில்தான் இருக்கின்றன.

ஆன்மா மனத்தைக் கடந்தது. உருவமற்றது. எனவே அது காலம், இடம் மற்றும் காரண, காரியங்களைக் கடந்ததாக மட்டுமே இருக்க வேண்டும்.

அது **காலம், இடம், காரண, காரியங்களைக்** கடந்ததானால், நிச்சயமாக எல்லையற்ற ஒன்றாகத்தான் இருக்க முடியும். எனவே, உங்களுக்குள் ஓர் ஆன்மா, எனக்குள் ஓர் ஆன்மா என்று ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வோர் ஆன்மா இருக்கிறது என்ற கருத்து உண்மையானதாக இருக்க முடியாது.

ஆகவே, அந்த ஆன்மா அனைத்து உடல்களின் உள்ளேயும், வெளியேயும் ஒன்றாகவே காணப்படுகின்றது. அது எதனுடனும் ஒட்டாதது. நீர், நெருப்பு, ஆயுதங்கள் என எதனாலும் அழிக்க முடியாதது. அது என்றும், எப்போதும் இருப்பது, எல்லையற்றது.

ஆன்மாவாக தன்னை அறியும் அந்த உண்மையான மனிதன் மட்டுமே, எல்லையற்றவனாக, எங்கும் நிறைந்தவனாக இருக்கின்றான். அந்த உண்மையான மனிதனின் எல்லைக்கு உட்பட்ட வடிவமே, இந்த ஸ்தூல உடலுடன் தோன்றும் பரு உடல் எனலாம்.

நாம் கண்களினால் காண்கின்ற பொழுது, தோன்றும் மனிதன் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், அவன் எல்லாவற்றையும் கடந்த, அந்த உண்மையான தனிமனிதனின் எல்லைக்கு உட்பட்ட பிரதிபலிப்பே என்று சாஸ்திரங்கள் கூறுவது உண்மையாகின்றது.

காரண காரியங்களைக் கடந்தும், **காலம், இடம்** ஆகியவற்றிற்குக் கட்டுப்படாமலும் இருப்பதால், அந்த ஆன்மாவாகவே இருக்கும் இந்த மனிதன் உண்மையில் சுதந்திரமானவனாகத்தான் இருக்க வேண்டும்.

அவன் ஒருபோதும் கட்டுபட்டவனாக இருக்கமுடியாது.

அவனைக் கட்டுப்படுத்தவும் முடியாது.

பிரதிபலிப்பாக, இவ்வாறு வெளிப்பட்ட ஆன்மா மனிதனுக்குள் மனமாக, சுய அறிவாக வெளிப்பட்டுக் கொண்டிருப்பதினால், **காலம், இடம் காரணகாரியம்** இவற்றின் எல்லைக்கு உட்பட்டு இருப்பதாக காணப்படுகின்றது.

இந்தக் கருத்தையே நமது தத்துவ ஞானியருள் சிலர், மனிதன் கட்டுப்பட்டவனைப் போன்று காணப்படுகின்றான். ஆனால், உண்மையில் அவன் கட்டுப்பட்டவனல்ல என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு, எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்த எல்லையற்ற ஆன்மீகத் தன்மைதான் நம் ஆன்மாவின் உண்மையான இயல்பு.

அப்படி, ஒவ்வோர் மனிதனுள்ளும், வெளியேயும் இருக்கின்ற ஆன்மா எல்லையற்றதே.

அதனால், ஆன்மாவிற்கு பிறப்பு, இறப்பு என்ற கருத்துக்கே இங்கு இடமில்லை. இந்த பரு உடலுக்கு மட்டுமே பிறப்பு, இறப்பு உண்டு. அது மட்டுமே எல்லைக்கு உட்பட்டது.

எனவே உடலுணர்வைக் கடந்து, இறந்தகால, எதிர்கால எண்ணங்கள் அனைத்தையும் விட்டொழித்தால்தான் உயர்ந்த குறிக்கோளை நோக்கி நாம் முன்னேற முடியும்.

உடலுக்குள்ளும், உருவத்துக்குள்ளும் நாம் சிக்கிக் கொண்டிருக்கின்றவரை, மனதின் சிந்தனை ஓட்டம் நிற்காது.

எப்பொழுது, எண்ணங்கள் ஏதுமற்ற, இருமைகள் தோண்றாத நிலை ஒருவனுக்கு சித்திக்குமோ, அப்பொழுதே, அவனுக்கு எல்லையற்ற **பேருணர்வுநிலை** என்பது, எளிதில் சாத்தியமாகின்றது.

பொதுவாக, மனதில் எண்ணங்கள் உண்டாகாத நிலை என்பது, **நிர்விகல்ப சமாதிநிலை** ஆகும். அந்த நிலையிலே மனதில் எண்ணங்கள் ஏதும் தோன்றாத நிலை என்றால், அங்கு இருமைகள் அற்ற நிலை என்று பொருள். அவ்வாறு இருமைகள் இல்லாத நிலையை மனம் அடையும்போது, அந்த **பேருணர்வு நிலை** என்ற நம் சுயானுபவம், அல்லது ஆத்மானுபவம் உண்டாகும். இதுவே, **ஆத்மானுபூதி** என்றும் அழைக்கப்படுகின்றது.

# 4. தனித்துவத்தின் தன்மை

பொதுவாக, இங்கு "**நான்**" என்பது இந்த உடல் அல்ல!. மனம் அல்ல!. அதாவது, உடல், உண்மையான நான் அல்ல. மனமும் உண்மையான நானாக இருக்க முடியாது.

ஏனென்றால், மனம் வளரவும், குறையவும் செய்கின்றது.

உண்மையான "**நான்**" என்பவன் எல்லாவற்றையும் கடந்த ஆன்மாவாகத்தான் இருக்க முடியும். அது மட்டுமே என்றென்றும் வாழ்வதாக உள்ளது.

பார்பதற்கு ஓடுகின்ற நதிநீர் இடையீடற்ற நீர்ப் பிரவாகமாகத் தோற்றம் அளித்தாலும், உண்மையில், அந்த நதிநீரானது தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றது.

அதுபோன்று, இந்த உடலும், மனமும் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டே இருக்கின்றன. உண்மையில், உடல், மனம் என்பதெல்லாம், மாறிக்கொண்டே இருக்கும் நிகழ்ச்சித் தொடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்கள் மட்டுமே ஆகும்.

அதுப்போலவே, உடம்பிலிருக்கும் ஒவ்வோர் அணுவும் கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கிறது. சில நிமிடங்கள் கூடச் சேர்ந்தாற்போல், யாருக்குமே உடல் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனாலும், நாம் அதனை ஒரே உடல் என்று எண்ணுகின்றோம்.

மனமும் அப்படித்தான், ஒரு கணம் இன்பமாகவும், மறுகணம் துன்பமாகவும், ஒருகணம் திடமாகவும், மறுகணம் பலவீனமாகவும் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் சுழலாகவே செயல்படுகின்றது.

ஆகவே, மனம் எல்லையற்ற ஆன்மாவாக இருக்க முடியாது.

எல்லைக்கு உட்பட்டவற்றிற்குத்தான் மாறுதல் உண்டு. எல்லையற்றதற்கு மாறுதல் என்பதே கிடையாது.

எல்லைக்கு உட்பட்ட உடல்கள் என்ற நிலையில் மட்டுமே நீங்களும், நானும் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். அப்படித்தான் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வோர் அணுவும் இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால் பிரபஞ்சம் முழுவதையும் ஒரே பொருளாக நினைத்துப்பார்த்தால், அதற்கு மாறுதலோ, இயக்கமோ உண்மையில் இல்லவே இல்லை.

இயக்கம் எப்போதும் ஒன்றைச் சார்ந்தது என்பது அனைவரும் அறிந்ததே. அதுப்போலவே, வேறொரு பொருளைச் சார்ந்துதான் நம்முடைய இயக்கமும் இருக்க முடியும்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்த ஒரு அணுவின் மாறுதலையும் மற்றோர் அணுவோடு ஒப்பிட்டுத்தான் தெரிந்துக் கொள்ளவும் முடியும். இந்த பிரபஞ்சம் முழுவதையும் ஒரே பொருளாக எடுத்துக் கொண்டால், அது எதைச் சார்ந்து இயங்குகின்றது?

பிரபஞ்சம் ஒன்றைத் தவிர, வேறு பொருளே இல்லை. ஆகவே, இந்த எல்லையற்ற இரண்டற்ற பொருளுக்கு மாறுதலோ, இயக்கமோ இல்லவே இல்லை. அது தனியானது, அதுதான் உண்மையானது.

எனவே, நம் உண்மையான இயல்பு எல்லையற்றதே அன்றி, எல்லைக்கு உட்பட்டது அல்ல. எப்போதும் மாறிக் கொண்டிருக்கின்ற, எல்லைக்குட்பட்ட சிறிய உயிர்களே நாம் என்று நம்மைப்பற்றித் தவறாகவே நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

இந்த தவறான எண்ணம் எவ்வளவுதான் திருப்தி தருவதாக இருந்தாலும், இது காலங்காலமாக இருந்துவரும் நம்முடைய மன மயக்கமே ஆகும்.

நீங்களே பரம்பொருள், நீங்கள் எங்கும் நிறைந்தவர்கள் என்று சொன்னால் மனிதர்களுக்குப் பயம் ஏற்படுகிறது. நீங்கள் எல்லா பொருட்களின் மூலமாகவும் செயல்படுகிறீர்கள், எல்லா கால்களின் மூலமாகவும் நடக்கிறீர்கள், எல்லா வாய்களின் மூலமாகவும் பேசுகிறீர்கள், எல்லா இதயங்களின் மூலமாகவும் உணர்கிறீர்கள் என்று கூறினால், இதில் கூறப்பட்ட உண்மையை யாரும் அறியத் தயாராக இல்லை. இவர்களது தனிப்பட்ட **சுயநலம்** அத்தகைய அனுபவத்தை ஏற்க மறுக்கின்றது.

தங்கள் தனித்துவம் என்ன ஆவது? என்று அவர்கள் திரும்பத் திரும்பக் கேள்வி கேட்கிறார்கள்.

**தனித்துவம் என்றால் என்ன?** என்பதை அவசியம் அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, பிறந்த குழந்தைக்கு மீசை இருப்பது இல்லை. ஆனால், அதே குழந்தை பெரியவன் ஆனவுடன் ஒருவேளை மீசையும், தாடியும் வளரலாம். இது குழந்தையின் உடலில் நடைப்பெறுகின்ற ஹார்மோன்களின் மாறுபாடுகள் என்பதினைக் கருத்தில் கொண்டு, அந்த குழந்தையின் உடல் மட்டுமே தனித்துவத்தை நிர்ணயிக்கிறது என்றால், அந்த குழந்தை வளரும்போது, தன் தனித்துவத்தை இழந்தவன் ஆகின்றான்.

அதாவது, உடல்தான் தனித்துவத்தை நிர்ணயிக்கிறது என்றால், ஒரு கண்ணையோ ஒரு கையையோ நான் இழந்து

விட்டால் என் தனித்துவத்தையும் நான் இழந்துவிடுவேன் என்பதாக ஆகிவிடும்.

இந்த நோக்கில் பார்த்தால், குடிகாரன் குடிப்பதை விடக் கூடாது. குடிப்பதை விட்டால் அவன் தனித்துவத்தை இழந்து விடுவான். திருடன் நல்லவனாகவே கூடாது, நல்லவனானால் அவனுடைய தனித்துவம் போய்விடும்! இவ்வாறு பயந்துபோய், ஒவ்வொருவரும் தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளக் கூடாது.

உண்மையில், எல்லையற்றதைத் தவிர வேறு எதற்கும் தனித்துவம் கிடையாது. அந்த நிலைக்கு மட்டும்தான் மாற்றமே இல்லை. மற்றவையெல்லாம் இடைவிடாமல் மாறிக் கொண்டே இருக்கின்றன.

நினைவிலும்கூட தனித்துவம் இருக்க முடியாது. உதாரணத்திற்கு, என் தலையில் ஓர் அடிபட்டதால் நான் என் கடந்தகால நினைவுகளை இழந்து விடுகின்றேன் என்று வைத்துக் கொள்வோம். அப்போது என் தனித்துவத்தை நான் இழந்து விடுவேன். அதாவது நானே இல்லாமல் போய் விடுவேன் என்பதாகும்.

என் மூன்று வயதுவரை நடந்த நிகழ்ச்சிகள் என் நினைவில் தற்பொழுது இல்லை. நினைவும், வாழ்க்கையும் ஒன்றுதான் என்றால், எனக்கு நினைவில்லாத காலம் என் வாழ்க்கை அல்ல என்று ஆகிவிடும். வாழ்க்கையின் எந்தப் பகுதி எனக்கு நினைவில்லையோ? அந்தப்பகுதியில் நான்

வாழவில்லை என்று ஆகிவிடும். இது தனித்துவத்தைப் பற்றிய மிகவும் சுருக்கமாகச் சொல்லப்பட்ட உண்மைகள்.

நாம் இன்னும் தனித்துவம் பெறவில்லை என்பது மட்டுமே உண்மை. அதை அடையத்தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். அது எல்லையற்றது. அதுதான் நம் அனைவரின் உண்மை இயல்பும் கூட.

இந்தப் பிரபஞ்சத்தின் வாழ்க்கை முழுவதையுமே தன் வாழ்க்கையாகப் பெற்றவன்தான் உண்மையில் வாழ்கின்றான். அவன் மட்டுமே அனைத்திலும் தன்னைக் காண்கின்றான். அவன் மட்டுமே அந்த இறைவெளியை, வெட்டவெளியை அறிகின்றான். இவனுக்கு மட்டுமே இந்த உடலும், மனமும் வந்து, போகின்ற தன் வழக்கத்திற்கு மாறான '**வாசனைகள்**' என்பதை உணர்கின்றான்.

நம் வாழ்க்கையின் முழுக் கவனத்தையும் எவ்வளவுக் கெவ்வளவு, இதுப்போன்ற எல்லைக்குட்பட்ட பொருட்களின் மீது செலுத்துகிறோமோ?, அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நாம் மரணத்தை நோக்கிச் செல்கின்றோம்.

நம் வாழ்க்கையை, மற்றவர்களின் வாழ்க்கையோடும், இந்த பிரபஞ்சத்தின் வாழ்க்கையோடும் ஐக்கியப்படுத்திக் கொள்ளும்போது மட்டும்தான், நாம் உண்மையில் வளமாக வாழ்கின்றோம்.

## அணுவும் ஆன்மாவும்

நாம் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த எல்லைக்கு உட்பட்ட, அற்பமான மனித வாழ்க்கையே மரணம், மரணம் மட்டும்தான், இதனால்தான் நமக்கு மரண பயம் உண்டாகின்கிறது.

இவ்வுலகில் ஒரே ஒரு உயிர் வாழ்ந்திருக்கும்வரை நானும் வாழ்வேன் என்று உணரும் போதுதான் மனிதனால் மரண பயத்தை வெல்ல முடிகின்றது.

எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன். எல்லோருள்ளும் நான் இருக்கிறேன். எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் நான் இருக்கிறேன். **'பிரபஞ்சமே நான்தான்'** என்று எப்போது ஒரு மனிதன் உண்மையை உணர்கின்றானோ?, அப்போதுதான் பயமற்ற நிலை அவனுக்கு வருகின்றது. அதுவரை, அவன் மரண பயத்தில் மட்டுமே இருக்கின்றான்.

இடைவிடாமல் மாறிக்கொண்டே இருக்கின்ற இந்த உடலுக்கும், உலகத்திற்கும் நிச்சயம் ஒரு நாள் அழிவு உண்டு.

ஆகவே, எல்லையற்றதாக எங்கும் இருக்கும் காரணத்தால் **'ஆன்மா'** மட்டுமே தனித்துவம் பெற்றது. எல்லையற்ற எதையும் பகுக்கவே முடியாது. எல்லையற்ற எதையும் துண்டுகளாக உடைக்கவே முடியாது. அது முழுமையானது, அது ஒரே மாதிரியானது. இரண்டற்றது, அதுதான் தனித்துவம் உடையது. அதுமட்டுமே தனித்தும் இருக்கின்றது.

# 5. உண்மை இயல்பு

உடலற்ற ஆன்மாவிற்குப் பரிணாம வளர்ச்சி கிடையாது என்பதினால், அது என்றுமே மாறாது. உடல் கொண்ட மற்ற அனைத்தும் மாற்றத்திற்கு உட்படுகின்ற காரணத்தினால், கெட்டவன், நல்லவனாவதும், மிருகம், மனிதனாவதும், (குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பதும்) என இதுப்போன்ற மாறுதல்களெல்லாம், இயற்கையின் பரிணாம வளர்ச்சி மட்டுமே ஆகும்.

உதாரணமாக, உங்களை என்னிடமிருந்து மறைக்கின்ற ஒரு திரை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தத் திரையில் ஒரு சிறு துவாரம் இருக்கிறது. அந்தத் துவாரம் மூலமாக உங்களில் சிலரின் முகத்தை மட்டுமே என்னால் பார்க்க முடிகின்றது.

இப்போது, நான் அந்தத் துவாரத்தை சற்று பெரிதாக்கினால், என் முன்னால் உள்ள காட்சியும் விரிவடைய ஆரம்பிக்கிறது. இறுதியில், அந்தத் திரையை முழுவதுமாக நீக்கிவிட்டால், நான் உங்கள் எல்லோரையும் நன்றாகப் பார்க்க முடிகின்றது.

இந்த உதாரணத்தில், நீங்கள் யாருமே மாறுதல் அடையவில்லை. விரிவடைந்தது துவாரம் மட்டும்தான். அதனால்தான், நீங்கள் உங்களைச் சிறிது சிறிதாக எனக்கு வெளிப்படுத்திக் கொண்டே வந்தீர்கள்.

ஆன்மாவின் நிலையும் இதுதான்.

நீங்கள் உண்மையிலேயே எந்த நிறை நிலையையும் அடையவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் ஏற்கனவே சுதந்திரமாகவும், பூரணமாகவும்தான் இருக்கின்றீர்கள்.

ஆனால், உங்களுக்குத்தான் அதன் உண்மைத் தெரியவில்லை. எப்படி?, என் முன்னால் இருந்த திரை உங்கள் அனைவரையும் தெளிவாகக் காண முடியாமல் மறைத்துக் கொண்டு நின்றதோ?, அதுப்போன்று, நீங்களும் உங்களுக்குள் இந்த உலகம், உறவுகள், பொருள்கள் என்ற திரையைக் கொண்டு மூடிக்கொண்டுள்ளீர்கள்.

அந்த திரையில் உள்ள சிறு துவாரத்தின் வழியாக நான் சிலரை மட்டும் கண்டுக் கொண்டதுப்போன்று, நீங்களும் சில ஆன்மீக விசயங்களை அவ்வப்பொழுது, ஆர்வத்துடன் கண்டு கொண்டு ஆனந்தப்படுகின்றீர்கள்.

உண்மையில், அந்த திரை முழுவதுமாக அகற்றப்படும் வரை ஆன்மீகத்தின் அரிய உண்மைகளை அறிய முடியாது.

## அணுவும் ஆன்மாவும்

பொதுவாக, மனிதன் **மதம், கடவுள், சொர்கம்** போன்ற மறுவுலகத் தேடுதல்கள் போன்றவைகளுக்கெல்லாம் அதிக முக்கியத்துவம் ஏன் தருகின்றான்? மனிதனுக்கு மட்டுமே ஏன் கடவுள் தேவைப்படுகின்றார்?

சிந்திக்கத்தானே மனம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு சமுதாயத்திலும், மனிதன் ஒரு பூரண லட்சியத்தை அடைய, தன்னுடைய சக மனிதர்களிடமோ, கடவுளிடமோ, அல்லது வேறு எங்கேயோ ஏன் தேடுகிறான்?

எனென்றால், பூரணத்துவம் பற்றிய கருத்து மனிதனுள் மட்டுமே இருக்கின்றது. நம் அனைவரின் இதயத் துடிப்பே அது தான். அது நமக்குத் தெரியவில்லை. அந்த முழுமை எங்கோ வெளியில் இருப்பதாக நாம் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

தன்னைத் தேடும்படியும், உணரும்படியும் நம்மைத் தூண்டுவது, நமக்குள்ளே இருக்கும் '**ஆன்மா**' என்ற கடவுள் மட்டும்தான்.

ஆனால், நாமோ கோயில்களிலும், சர்ச்சுகளிலும், தர்க்காக்களிலும், மண்ணிலும், விண்ணிலும் மற்றெல்லா இடங்களிலும், பலகாலமாகக் கடவுளை வெளியே தேடிவிட்டு, கடைசியில் ஆரம்பித்த இடத்திற்கே அதாவது, மீண்டும் நம்முடைய ஆன்மாவிற்கே வந்து சேருகின்றோம்.

**"தேடிக்கண்டு கொண்டேன்**

**திருமாலொடு நான்முகனும்**

**தேடித் தேடொணாத் தேவனை**

**என்னுளே தேடிக்கண்டு கொண்டேன்".**

- நான்காம் திருமுறை. திருநாவுக்கரசர் தேவாரம்.

இங்கு அப்பர்பெருமான் என்ன கூறவருகின்றார், திருமாலும், பிரம்ம தேவனும் தேடிக்கண்டு பிடிக்க முடியாத இறைவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் என்கிறார்.

எப்படி?

எப்படி நம்மால் இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தின் தொடக்கமும், முடிவையும் (ஆதியும், அந்தமும்) தேடிக் கண்டு பிடிக்க முடியாதோ? அதுப்போல, நம் மனதில் எழுகின்ற காமம், குரோதம் மோகம், மதம், மாச்சரியம் மற்றும் அஹங்காரம் போன்று விரிந்துக் கொண்டே போகும் மனோ வியாபகத்தை புற அறிவினால் கண்டுபிடிக்க முடியாது.

அதனால், இந்த மனம் பிறப்பதற்கான ஊற்றுக்கண் எங்கு உள்ளது? என்பதை நம் உள்ளே தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டும். அப்படி, மனதின் அந்த தொடக்க புள்ளியைக் கண்டு பிடித்துவிட்டால், எண்ணங்களால் எழுந்த அந்த மனதை அழித்து விட்டு, என்றும் அழியாத அறிவுச்சுடர் ஆன்மாவான பரம[தன்]னை கண்டுகொள்ள முடியும் என்கிறார்

இந்த ஆன்மாவை அறியத்தான் நாம் உலகமெல்லாம் இங்கும், அங்கும் அலைந்து தேடிக் கொண்டிருக்கின்றோம். இந்த ஆன்மாவை உணர்வதற்காகத்தான் கோயில்களிலும், சர்ச்சுகளிலும் சென்று பாவங்களைக் கழுவுகின்றேன் என்று அழுதும், பிரார்த்தனைகள் பல செய்தும் வழிபடுகின்றோம்.

இந்த ஆன்மாவைத்தான் எங்கோ விண்ணில், மேகங்களுக்குமேல் மறைந்திருக்கும், மர்மங்களுக்குள் மர்மம் என்று நினைத்துக் கொண்டுள்ளோம்.

இந்த ஆன்மா நம்முள் உயிருக்கு உயிராக, நமக்கு அருகிலுள்ள அனைத்திலும், மிக அருகில் உள்ளது. நம்முடைய **உடல், பொருள், ஆவி** இவற்றின் உண்மையான உருவம் இந்த ஆன்மாதான். இதுதான் நம்முடைய உண்மையான இயல்பு.

இதை உறுதிப்படுத்துவதும், வெளிப்படுத்துவதும், இவ்வாறு அறிவதும், நம்மை நாம் தூய்மைப்படுத்துவதற்காக என்று நினைத்துக்கொள்ளக் கூடாது.

நாம் ஏற்கனவே தூய்மையாகத்தான் இருக்கின்றோம். அதாவது, ஏற்கனவே, நாம் அனைவரும் நிறை நிலையை அடைந்தவர்களாகத்தான் இருக்கின்றோம்.

முன்சொன்ன திரை உதாரணத்தில் உங்களையும், என்னையும் மறைக்கின்ற திரையைப் போன்றதுதான் இந்த

உலகம். இதற்கு அப்பாலுள்ள ஆன்மாவைப் பற்றிய அரிய உண்மையை இதுதான் மறைக்கிறது.

நீங்கள் நினைக்கும் ஒவ்வொரு நல்லெண்ணமும், செய்யும் ஒவ்வொரு நல்ல செயலும், இந்தத் திரையைச் சிறிது சிறிதாகக் கிழிப்பதுபோல் செயல்படுகிறது. அதனால் திரைக்கு அப்பாலுள்ள தூயவரான, எல்லையற்றவரான இறைவன் சிறிது, சிறிதாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றார்.

இதுவே மனிதனின் மகத்தான சரித்திரம். திரை நுண்ணியதாக மாற மாற, அதற்குப் பின்னாலிருக்கும் உண்மை மேலும், மேலும் பிரகாசிக்கிறது. ஏனெனில், பிரகாசிப்பதே அந்த உண்மையின் இயல்பாகும்.

அது அறிய முடியாதது. அதை அறிய முயல்வது வீணே, அது அறியப்படக்கூடியதாக இருந்தால், அது அதுவாக இருந்திருக்காது. ஏனெனில் அது என்றென்றுமே அறியும் பொருளாகும்.

ஆனால், நாம் கற்ற கல்வியறிவு நம்மை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்படுத்துகின்றது. நம்மைப் புறச் சார்பு உடையவர்களாக மாற்றுகின்றது. இதை அறியாததினால், நமக்கு ஆன்மா மறைக்கப்படுகின்றது.

ஆன்மாவே நிரந்தரமாக எல்லாவற்றையும் அறிபவன். பிரபஞ்சத்திலுள்ள நிரந்தர சாட்சியாக இருப்பவன். நாம் ஏற்றி

வைத்துக் கொண்ட புறஅறிவு என்பது, அந்த பேரறிவு நிலையின் வீழ்ச்சி, ஒரு தாழ்ந்தபடி போன்றதே.

நாம் ஏற்கனவே அந்த நிலையான அறிபவனாகத்தான் இருக்கிறோம்.

அதை எப்படி அறிவது?

ஒவ்வொரு மனிதனின் உண்மை இயல்பும் அதுதான். அவன் அதை வெளிப்படுத்த பல வழிகளில் முயல்கின்றான்.

இல்லாவிட்டால், இவ்வளவு வகை, வகையான நீதிநெறிக் கோட்பாடுகள் ஏன் நம்மிடையே இருக்க வேண்டும்?.

பல்வேறு வகையான நீதிநெறிக் கோட்பாடுகளுள், பல்வேறு விதங்களில் வெளிப்பட்டு நிற்கின்ற ஒரு கருத்து உள்ளது.

அது மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், அறவழியில் வாழ வேண்டும், அனைத்து உயிர்களிடமும் அன்பாக இருக்க வேண்டும் போன்ற அனேக அடிப்படைக் கோட்பாடுகளை ஆழமாக மனதில் கொண்ட மனசாட்சி உடையவனாக மனிதன் இருப்பினும், இவனது மனம் புறத்தில் உள்ள அனேகவிதமான அழியும் பொருள்களில் நாட்டம் கொள்வதினால், அகத்தில் உள்ள அந்த ஆழ்ந்த பொருளை அறிய மறுக்கின்றது.

அறிந்துக் கொண்டவன் மட்டுமே, நான்தான் இந்தப் பிரபஞ்சம் என்பதிலும், இந்தப் பிரபஞ்சம் இரண்டற்றது என்றும், ஒன்றேயான, நிலையான, அந்த உண்மையின் பல்வேறு வெளிப்பாடுகளாகத்தான் இந்த உலகம் இருக்கின்றது என்பதை உணர்கின்றான்.

அப்படி இல்லாவிட்டால், கல்லான மனித மனம் கூடச் சில நேரங்கள் கனிவதைக் காணும்பொழுது, அந்த கடவுள் தன்மை அவனிடம் வெளிப்படுவதை அறிய முடிகின்றது.

மனிதனிடம், நீ பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தனித்துவம் வெறும் மனமயக்கம் மட்டுமே, அதை அப்படிக் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதல்ல என்று சொன்னால் அவன் பயப்படுகின்றான்.

# 6. மனிதனின் சுயநலம்

ஒருவன் தன்னுடைய சுயநலத்தை சுயமாக அல்லது முழுமையாக விடுவது மட்டும்தான், என்னுடைய எல்லா நன்னெறிக்கும் அடிப்படை என்றும் கூறுகிறான்.

**இந்த முழுச் சுயநல மறுப்பு என்பது என்ன?**

தன் உடலை உண்மையெனக் கருதிக் கொண்டு, ஒன்றேயா ஆன்மாவின் மீது, அனைத்தையும் எற்றி வைத்துக் கொண்டு, '**நான்**', '**எனது**', '**என்னுடையது**' என்ற அகங்கார மமகாரங்கள் மற்றும் அனேக மூடநம்பிக்கையிலிருந்து விடுபடுவது மட்டுமே சுயநலத்தை விடுவது என்பதாகும்.

அந்த நிலையில் மட்டுமே இந்த போலியான உடலை "**நான்**" எனக் கருதிக் கொண்டிருந்தவனுக்கு, உண்மையான '**ஆன்மா**' மட்டுமே "**நான்**" என்ற அனுபவம் வெளிப்படுகின்றது.

இதுவே, உண்மையான '**சுயநல மறுப்பு**' எனப்படும்.

இதுவே, எல்லா அறநெறி உபதேசங்களின் மையமும், அடிப்படையான சாரமும் ஆகும்.

தெரிந்தோ தெரியாமலோ? உலகம் முழுவதும் இந்தக் குறிக்கோளை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. நடைமுறையிலும் ஓரளவு இதை அனுசரிக்கின்றது. பெரும்பாலானவர்கள் தங்களை உணராமலேயே இதைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் உணர்வு பூர்வமாகச் செய்ய வேண்டும், '**நான்**', '**எனது**', என்பவைகள் உண்மையான ஆன்மாவல்ல. ஆன்மாவின் தடைகளே என்று அவர்கள் உணர்ந்து, அவற்றை விட்டுவிட வேண்டும்.

இவ்வாறு, தன்னை ஆன்மாவாக அறிந்த மனிதன், அகத்தேயுள்ள எல்லையற்ற உண்மையின் ஒரு மின்னல் தோற்றம் மட்டுமே.

எல்லாமாக இருக்கும், எல்லையற்ற வெளியின் ஒரு சிறு வெளிச்சம் மட்டுமே. ஆனால், அவனது உண்மையான இயல்பு எல்லையற்றது.

**இந்த ஆன்ம அறிவினால் அடையப்படும் பயன் யாது?**

மனிதர்கள் இந்தக் காலத்தில் எல்லாவற்றையும் லாபக் கண்ணோட்டத்திலேயே காணப்பழகி விட்டதினால், இதனால் எனக்கு எத்தனை ரூபாய் லாபம்? எவ்வளவு கிடைக்கும்? என்பது போன்றுதான் கணக்கு கேட்கின்றனர்.

பணத்தையோ?, உலகியல் லாபத்தையோ அளவீடாகக் கொண்டே, உண்மையை மதிப்பிட வேண்டும் என்று சொல்ல, அற்ப மனம் படைத்த மனிதனுக்கு என்ன உரிமை இருக்க முடியும்?

ஓர் உண்மையால் பலன் இல்லாவிட்டால், அதன் உண்மைத் தன்மை குறைந்துவிடுமா என்ன?

உண்மையை மதிப்பிடுவதற்கு உலகியல் லாபம் கொண்ட பயன்நோக்கு முறை சரியானதல்ல. ஆனால், உண்மையால் அவனுக்கு மிக உயர்ந்த பலன் உள்ளது.

எல்லோரும் தேடி அலைவது இன்பத்தை மட்டும்தான். ஆனால், பெரும்பாலோர் உண்மைப் பொருளில் அல்லாமல், நிலையில்லாத பொய்யான பொருள்களில் அதை அடைய முயற்சிக்கின்றார்கள்.

புலன்களின் மூலம் ஒருபோதும் உண்மையான இன்பம் உண்டாவதில்லை. புலன்களின் வாயிலாகவோ, புலன் அறிவின் வாயிலாகவோ, புலன் அனுபவங்களின் வாயிலாகவோ இன்பம் இருப்பதை இதுவரை யாரும் கண்டதில்லை.

**ஆன்மாவில் மட்டுமே இன்பம் இருக்கின்றது.**

ஆகவே ஆன்மாவில் இன்பம் காண்பதுதான் மனித குலத்திற்கு மிக உயர்ந்த பலனைக் கொடுக்கும்.

அறியாமையிலிருந்தே, அனைத்து துன்பங்களும் அறியப்படுகின்றன. எல்லையற்ற அந்த ஆன்மா அழுகின்றது, கதறுகின்றது என்று, அதனை ஒரு எல்லைக்குள் கொண்டு வந்து, வைத்துக் கொள்கின்ற கொடுமையை அனைத்து அறியாமைகளுக்கும் அடைப்படை எனலாம்.

அழிவற்ற எப்போதும் தூய்மையான முழுமையான ஆன்மாவாகிய நம்மை, சிறிய மனம், சிறிய உடல் என்று, நம்மை நாமே நினைத்துக் கொள்வதுதான் எல்லா அறியாமையின் மூலகாரணம். இந்த அறியாமையின் உச்சத்திலிருந்தே எல்லா சுயநலமும் பிறக்கின்றது.

நான் இந்தச் சிறிய உடல் என்று நினைத்த உடனேயே, மற்ற உடல்களுக்குக் கேடு செய்தாவது, இந்த உடலைக் காப்பாற்றவும், அழகாகவும் வைத்துக் கொள்ள ஆசைப் படுகின்றேன். அப்பொழுதே **நீங்கள் வேறு, நான் வேறு** என்ற இருமைகள் உண்டாகி விடுகின்றது. இந்தப் பிரிவுணர்ச்சியே எல்லா தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணமாகின்றது.

இந்த உலகில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பாலான மனிதர்களில் ஒரு சிறு பகுதியினரேனும் தங்கள் சுயநலம், குறுகிய மனப்பான்மை, அற்பத்தனம் ஆகியவைகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டால்கூட, நாளையே இந்த உலகம் முழுவதும் சொர்க்கமாக மாறிவிடும்.

இதுதான் பலன்.

# 7. உண்மையான வீரம்

பொதுவாக, இன்றைய நவீன எந்திரங்களாலும், தொலைத் தொடர்பு, கணிணிமயம் மற்றும் இந்த உலகியல் அறிவின் ஆழமான முன்னேற்றத்தாலும், இனி, இந்த உலகம் இனி சொர்க்க பூமியாக மாறுவது என்பது, நிச்சயமாக நடக்காது.

எரியும் நெருப்பில் ஊற்றுகின்ற எண்ணெய் எவ்வாறு, அந்த நெருப்பின் தீவிரத்தை மேலும் அதிகமாக்குமோ? அதுப்போன்று, இத்தகைய அறியாமைகளுக்கு ஆளான இந்த மனித சமுதாயம் இனித் துன்பத்தைத்தவிர, இன்பத்தை அடைவது என்பது சாத்தியம் ஆகாது.

ஆன்ம அறிவு இல்லாத, எல்லா உலகியல் அறிவும், எரியும் நெருப்பில், எண்ணெயை ஊற்றுவது போலாகும்.

உலகியல் அறிவு, சுயநலமுள்ள மனிதனின் கையில், மற்றவர்களுக்குத் தீமை செய்யும் இன்னுமோர் ஆயுதம் போலாகி விடுகின்றது.

இதனால் அவன் தன்னைப் பிறர் நலத்திற்காகத் தியாகம் செய்வதை விடுத்து, மற்றவர்களின் வாழ்வை அழித்து தான் மட்டும் வாழ வேண்டும் என்று கருதுகின்றான்.

ஆன்ம அறிவை அன்றாட வாழ்வில் நடைமுறைப் படுத்த முடியுமா? என்பது ஒரு சிக்கலான விசயமாகக் கருதுகின்றான். அது இன்றைய சமுதாயமாக இருந்தாலும் சரி, இனி வரப்போகின்ற புதிய சமுதாயமாக இருந்தாலும் சரி, என்றுமே, உண்மை அதன்முன் பணிந்து, கைகட்டி நிற்பதில்லை.

சமுதாயம்தான் உண்மையை மதித்து நடக்க வேண்டும். இல்லையென்றால், அந்தச் சமுதாயத்திற்கு அழிவு நிச்சயம்.

உண்மையின் அடிப்படையில்தான் சமுதாயங்களை அமைக்க வேண்டும். சமுதாயத்தின் தேவைக்கேற்ப உண்மை மாறாது.

சுயநலமின்மையைப் போன்ற ஓர் உயர்ந்த உண்மையை மனித சமுதாயம் பின்பற்ற முடியவில்லையென்றால், மனிதன் சமுதாயத்தை விட்டுவிட்டுக் காட்டிற்குப் போய்விடுவதே நல்லது.

அவ்வாறு செய்பவன்தான் துணிவுள்ளவன்.

துணிச்சலில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று மரணத்தை எதிர்க் கொள்ளும் துணிச்சல். மற்றொன்று ஆன்மீக விஷயங்களில் ஏற்படும் திடச்சித்தம்.

இந்தியாவின்மீது படையெடுத்து வந்த அலெக்சாண்டர் என்ற சக்கரவர்த்தியின் ஆசிரியர், அவரிடம் இந்தியாவில் உள்ள சில முனிவர்களை நேரில் போய் சந்திக்குமாறு கூறினார்.

சக்கரவர்த்தி அலெக்சாண்டரும் வெகு நாட்கள் தேடிய பிறகு, ஒரு வயதான கிழட்டு முனிவர் ஒரு கற்பாறையின் மீது உட்கார்ந்திருப்பதை பார்த்தார். சிறிது நேரம் அவருடன் பேசியபோது, அந்த முனிவரின் அறிவுத்திறன் சக்கரவர்த்தியை மிகவும் கவர்ந்தது. தம்முடன் தமது நாட்டிற்கு வருமாறு அவர் அந்த முனிவரை அழைத்தார்.

அதற்கு அந்த முனிவர், நான் வர விரும்பவில்லை. இந்தக் காட்டிலேயே நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்று சொன்னார்.

அதற்கு சக்கரவர்த்தி அலெக்சாண்டரும், நான் உங்களுக்குச் செல்வம், பதவி, இருப்பிடம் என எல்லாவற்றையும் தருகின்றேன். என்னால் அது முடியும். காரணம், நான் இந்த உலகத்திற்கே அதிபதி என்றார்.

அந்த பொருட்களின் மீதெல்லாம் எனக்கு சிறிதும் ஆசை கிடையாது. என்று அந்த முனிவர் பதிலளித்தார். உடனே, அலெக்சாண்டர் கோபமாக, என்னுடன் வரவில்லை என்றால் உம்மைக் கொன்று விடுவேன் என்று கூறினார்.

அந்த முனிவர் அமைதியாகப் புன்னகை செய்துவிட்டு, சக்கரவர்த்தியே நீ பேசியவற்றுள், மிகவும் வடிகட்டிய முட்டாள் தனமான பேச்சு இதுதான்.

உன்னால் என்னைக் கொல்ல முடியாது. சூரியனால் என்னைக் காயச் செய்ய முடியாது. நெருப்பு என்னை எரிக்க முடியாது. வாள் என்னைக் கொல்ல முடியாது. பிறப்பு, இறப்பற்ற எப்போதும் நிலைத்திருக்கின்ற சர்வ வல்லமை படைத்த, எங்கும் நிறைந்த "**ஆன்மா நான்**" என்று சொன்னார்.

இதுதான் மரணத்தை எதிர்கொள்ளும் மனிதனின் **மகத்தான வீரம்.** மற்றது, புலி அல்லது சிங்கத்திடம் காணப்படுகின்ற மிகச் சாதாரண வீரம்.

மேற்சொன்ன மனிதனின் வீரம் ஆன்ம அறிவினால் அடையப்படுவது. இரண்டாவது சொன்ன மிருகங்களின் வீரம் இறுமாப்பினால் வேட்டையாடுவது.

நம்மால் நம் சமுதாயத்தை உண்மையுடன் ஒன்றிணைக்க முடியா விட்டாலும், மிக உயர்ந்த உண்மையைக் கடைப்பிடிக்கக் கூடிய விதத்தில், சமுதாயத்தை உருவாக்க முடியா விட்டாலும், மகத்தான மனிதப் பிறவியில் பிறந்தும் வீணே ஆகும்.

எனவே, இந்த உண்மையை உணர்ந்துக் கொள்ளவும், நடை முறையில் பின்பற்றவும் தேவையான துணிவைப் பழகிக் கொள்வது மிகவும் அவசியம். இந்தத் துணிவு மரணத்தைக் கண்டு பயப்படாது. மாறாக அது மரணத்தை வரவேற்கிறது.

தன்னை ஆன்மா என்று, தன் சொரூபத்தை உணரும் சக்தியை மனிதனுக்குக் கொடுக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் யாரும் தன்னைக் கொல்ல முடியாது என்று மனிதனுக்கு உணர்த்துகின்றது.

அந்த நிலை வந்தால்தான் நாம் உண்மையில் **'முக்தி'** பெற்றவர்கள் ஆகின்றோம். அப்பொழுது மட்டும்தான் நாம், நம்முடைய உண்மையான ஆன்மாவை, நம் சுயத்தை உணர்கின்றோம்.

அத்தகைய இந்த ஆன்மாவைப்பற்றி ஆரம்பத்தில் மகான்களின் உபதேசங்களின் வாயிலாக கேட்கப் பழக வேண்டும். பிறகு அதைப்பற்றி அனுதினமும் சிந்திக்கப் பழக வேண்டும். அதன் பின்னர் கேட்டு, சிந்தித்த அந்த மகா வாக்கியத்தின் பொருள் உணர்ந்து, அதை தியானிக்கப் பழக வேண்டும்.

செய்யும் செயலை மட்டுமே உயர்வாகவும், புத்தியினால் சிந்திப்பதைச் சிறுமையாகவும் மதிப்பிடுகின்ற, ஒருவித மனமயக்கம் தற்காலத்தில் நம் மக்களிடையே அதிகம் காணப்படுகின்றது.

செயல் சிறந்ததுதான் என்றாலும், சிந்தனைதான் அதன் அடிப்படை என்பதை அவசியம் அனைவரும் அறிய வேண்டும். மேலும், நம் மனதில் வருகின்ற சிந்தனைகள் எந்த அளவிற்கு நேர்மறை எண்ணங்களாக வெளிப்படுகின்றது என்பதையும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

உடல் தசைகளின் மூலம் வெளிப்படும் சாதாரணமான சக்தியையே '**செயல்**' என்கிறோம். ஆனால் சிந்தனையின்றிச் செயலில்லை. ஆகவே சிறந்த, உயர் எண்ணங்களால் உங்கள் புத்தியைக் கூர்மையாக்குங்கள். வாழ்க்கையில் சிறந்த லட்சியங்களையே நடைமுறையில் கொள்ளுங்கள். அவற்றை உங்களிடமிருந்து ஒருபோதும் விலக விடாதீர்கள்.

இத்தகைய ஈடுபாட்டினால் மட்டுமே, அரிய பலச் செயல்களை ஆனந்தமாகச் செய்ய முடியும், நாம் சிறியவர்கள் என்றும், நாம் பிறந்துள்ளோம், இறக்கப் போகின்றோம் என்றெல்லாம் நம்மை நாமே சுய மயக்கத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறோம். அதனால், எப்போதும் பயத்திலேயே இருக்கின்றோம்.

நாம் தூய்மையான, எல்லையற்ற, முழுமையான ஆன்மா என்பதை அறியாமல் இருக்கின்றோம். மேலும், இந்தப் பிரபஞ்சத்தின் சக்தி முழுவதும் நமக்குள்தான் இருக்கின்றது.

குழந்தைப் பருவத்திலிருந்தே மனிதர்களின் மனத்தில் நல்ல ஆக்கபூர்வமான, உறுதியான, உதவுகின்ற எண்ணங்களே உண்டாக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட உறுதியான, உதவுகின்ற எண்ணங்களே அவனை **உத்தமன்** என்பதை உலகிற்கு அறிவுறுத்தும்.

நம் சக்தியைப் பறித்து, நம்மைப் பலவீனமாக்கும் எண்ணங்களுக்கு எப்பொழுதுமே இடம் கொடுக்கக் கூடாது. நல்ல எண்ணங்களை மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். தீய எண்ணங்களை எழும்பொழுதும் மனதில் இருந்து அகற்றிவிட வேண்டும்.

எழுகின்ற எண்ணங்களை கவனியுங்கள். அந்த எண்ணங்களை கவனிக்கின்றீர்கள் என்பதை, விழிப்புற்ற புத்தி விசாரித்து, நடைமுறைக்கு கொண்டு வரலாமா?, வேண்டாமா? என்பதை அப்பொழுதே அறிவித்து விடும்.

*விழிப்புற்ற புத்தி என்றால் என்ன?*

"ஆமை எப்படி? எல்லாப் பக்கங்களிலிருந்தும் தனது உறுப்புகளை உள்ளிழுத்துக் கொள்வதுப்போல, எப்போது மனிதன் தன் ஐம்புலன்களையும் அடக்கி ஆள்கின்றானோ, அப்பொழுது அவனது '**புத்தி விழிப்புற்று இருக்கின்றது**' என்று பொருள்".

அந்த உள்ளுணர்வு தன் விவேகத்தினால், விழிப்புணர்வு கொண்டு, பேருணர்வான இந்த அண்ட உணர்வோடு ஒன்று சேர்ந்துக்கொண்டு, நானே பரம்பொருள், நானே வெட்டவெளி, நானே ஆன்மா, நானே அனைத்தும் என்று எப்பொழுதும் தன் சுய அறிவில், தன் சுய சொரூபத்தில் நிற்கும்.

இரவு, பகலாக நம் மனத்தில் எற்றி வைத்துக்கொண்ட அறியாமை எண்ணங்களைத் துறந்து, அந்த அறிவாகவே "**நான் இருக்கிறேன்**" என்பதை தன்னுள் ஒருவன் உணர்கின்ற பொழுது, இந்த மொத்த பிரபஞ்சமும் எனக்கு வேறாக இல்லை!, "**நான் இந்த பிரபஞ்சத்தில் இருப்பதுப் போன்றே, இந்த பிரபஞ்சம் என்னுள் இருக்கின்றது**!" என்ற பேருண்மை புரியும்.

உலகின் எல்லையற்ற சக்தி நமக்கே சொந்தமானது. நம் மனத்தை மறைத்துக் கொண்டிருக்கும் மத நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள், போன்று ஏற்றிவைத்துக் கொண்டுள்ள ஏராளமான பயனற்ற நம்பிக்கைகளையும், எண்ணங்களையும், மாற்றுவதற்காக, பயனுள்ள நல்ல எண்ணங்களையும், நலம் தரும் நம்பிக்கைகளையும் கொண்டு, பயனற்றவைகளை வெகுதூரம் விரட்டி அடியுங்கள்.

*வெற்றி நிச்சயம்! வேத சத்தியம்!*

**ஓம் தத் சத்!**

Prajnan **Website:-** paraparam.in


அணுவும்
ஆன்மாவும் !
ப்ரக்ஞன்